
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவாச்சாரியாரின்

# அருள்ஜோதி

(சமய சஞ்சிகை)



ஆசிரியர்

## டாக்டர். ஸ்ரீ ஐயப்பதாஸ குருக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஸ்ரீதேவி இராஜராஜேஸ்வரி துணை

மாத சஞ்சிகை

# அருள் ஜோதி



## சந்தாவிபரம்

| | | |
|---|---|---|
| ஆயுட்காலச் சந்தா | 1000. | 00 |
| ஆண்டுச் சந்தா | 250. | 00 |
| தனிப் பிரதி | 25 | 00 |

### தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி


டாக்டர். ஸ்ரீ ஐயப்பதாஸன் சாம்பசிவ சிவாச்சாரியார்

(அகில இலங்கை சமாதான நீதவான்)

கொழும்பு-இந்துமத குருபீடம்

(சபரிமலை ஸ்ரீ சாஸ்தா பீடம்)

90/22, ஜோசப் டயஸ் லேன், புளூமெண்டால் றோட்,

கொழும்பு - 15.

T.P. 527025



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்னை கண்மணி
நூலகம்
ஸ்ரீ காளிபுரம்
பெரியபோரதீவு.

" இலங்கை இந்துமத குருபீடாதிபதி "

" சிவாகம ஞானி " சிவாச்சார்ய சிம்மம் "

அருள்ஜோதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சார்யார்

அவர்களின் ஞாபகார்த்தமாக

சிவாச்சாரியாரின் ..........

# அருள்ஜோதி

எனும் ஆன்மீக மாத இதழ்

வெளி வருகிறது என்பதனை

ஆன்மீகப் பெருமக்களுக்குத்

தெரிவித்துக்கொள்கின்றோம்,



நூலக உரிமையாளர்
திருமதி. பார்வதி கண்மணி

" சபரிமலை ஸ்ரீசாஸ்தா பீடாதிபதி "

டாக்டர் ஸ்ரீஜயப்பதாஸன் சாம்பசிவ சிவாச்சார்யார்

( அகில இலங்கை சமாதான நீதவான் )

## கொழும்பு - இந்துமத குருபீடம்

அகில இலங்கை சபரிமலை ஸ்ரீசாஸ்தா பீடம்

90/22, ஜோசப் டயஸ் லேன், கொழும்பு - 15. T.P. 527025

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈசுர வருஷம் – (1997)

## வைகாசி மாத விசேஷ தினங்கள்

| தமிழ் திகதி | ஆங்கில திகதி | கிழமை | உத்தராயணம் – வசந்தருது |
|---|---|---|---|
| 01. | 15. 5. 97 | வியாழன் | வைகாசி மாதப்பிறப்பு |
| 04. | 18. 5. 97 | ஞாயிறு | ஏகாதசி விரதம் |
| 05. | 19. 5. 97 | திங்கள் | பிரதோஷ விரதம் |
| 07. | 21. 5. 97 | புதன் | வைகாசி விசாகம் |
| 08. | 22. 5. 97 | வியாழன் | பூரணை விரதம் – ( அர்த்த நாரீஸ்வர விரதம்) |
| 18. | 01. 6. 97 | ஞாயிறு | ஏகாதசி விரதம் |
| 19. | 02. 6. 97 | திங்கள் | பிரதோஷ விரதம் |
| 20. | 03. 6. 97 | செவ்வாய் | கார்த்திகை விரதம் |
| 21. | 04. 6. 97 | புதன் | அமாவாசை விரதம் |
| 26. | 09. 6. 97 | திங்கள் | சதுர்த்தி விரதம் |
| 28. | 11. 6. 97 | செவ்வாய் | ஷட்டி விரதம் |
| * ஆனி 1. | 15. 6. 97 | ஞாயிறு | ஆனி மாதப்பிறப்பு |
| 02. | 16. 6. 97 | திங்கள் | ஏகாதசி விரதம் |

கொழும்பு இந்துமத குருபீடம்
கொழும்பு – 15.
T.P. 527025

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

சிவாச்சாரியாரின்

# அருள்ஜோதி

(ஆன்மீக சஞ்சிகை)

அருள் - 01 வைகாசி மாதம் - 1997 ஜோதி - 01

ஆசிரியர் : - டாக்டர் ஶ்ரீ ஐயப்பதாஸன் சாம்பசிவ சிவாச்சார்யார். ஜே. பி.

## மலர்ந்த புஷ்பங்கள்

1. முகவுரை ..........................................................
2. இரங்கலுரை ..........................................................
3. வேதம் ..........................................................
4. உபநிஷதமும் திருமுறையும் ..............................
5. உபநயனமும் விதிமுறைகளும் ..............................
6. தாண்டவம் புரியும் எமதாண்டவன் ....................
7. எண்குணத்தான் ..........................................................
8. வினாவிடை ..........................................................

## கொழும்பு - இந்துமத குருபீடம்

### அகில இலங்கை சபரிமலை ஶ்ரீசாஸ்தா பீடம்

90/22, ஜோசப் டயஸ் லேன், கொழும்பு - 15.

Telephone : 527025

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பிரம்மஸ்ரீ. பா. ஷண்முகரட்ண சர்மா. J.P. அவர்களின்

# ஆசியுரை

இலங்கையின் இந்துமதகுரு பீடாதிபதியாக மகுடம் சூட்டப்பட்டு இந்துமத குருபீடத்தை அலங்கரித்த " சிவாகமஞானி " நாயன்மார்கட்கு அருள்ஜோதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்களின் திடீர் மறைவு சைவ உலகிற்கே பெரும் அதிர்ச்சியைக் கொடுத்தது என்றால் அது மிகையாகாது.

சிவாச்சார்யார் மறைந்தும் அவர் புகழ், பெயர் மறையாமல் காத்துவரும் ஸ்ரீஐயப்பதாஸன், சிவாச்சார்யாரின் அருள்ஜோதி எனும் பெயரில் மாத வெளியீடாக ஆன்மீக மலரை வெளியிடுவது அறிந்து பெருமிதம் கொள்கிறேன்.

" மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி, இவன் தந்தை
என் நோற்றான் கொல்! எனும் சொல் "

என்ற வள்ளுவனின் குறளுக்கு ஏற்றாப்போல் சாதனைபுரியும் எங்கள் அன்புதாஸனாகிய ஐயப்பதாஸனின் பணிகள் தொடர எல்லாம் வல்ல பாலசெல்வ விநாயகப் பெருமானைப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கிறேன்.

– சுபம் –

மருதானை
கொழும்பு – 10.
T. P. 692239

பா. ஷண்முகரெட்ண சர்மா J.P.
பிரதம குரு
ஸ்ரீ பாலசெல்வ விநாயகர் தேவஸ்தானம்
கப்பித்தாவத்தை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ சந்த்ரமௌளீச்வராய நம :
ஸ்ரீ சங்கர பகவத் பாதாசார்ய பரம்பராகத
ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி

## ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் அவர்கள்

ஸ்ரீ மடம் ஸம்ஸ்தானம்
1, சாலைதெரு, காஞ்சிபுரம் - 631502.



அமரத்துவம் எய்திய ......................

இலங்கை இந்துமத குருபீடாதிபதி
"சிவாகம ஞானி"

## ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சார்யார் அவர்களின்

ஞாபகார்த்தமாக "அருள்ஜோதி"

எனும் ஆன்மீக

மாத இதழ் வெளிவரவுள்ளது அறிந்து

சந்தோஷிக்கிறோம்.


ஆன்மீக மக்களுக்கு "அருள்ஜோதி"

அருளின்பம் ஊட்டும் மலராக மலர

ஆசீர்வதிக்கிறோம்.

**ஸ்ரீ நாராயணஸ்மிருதி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

நவாலியூர்

பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள் ஐயா அவர்களின்

அருளாசியுரை

– தந்தை வழியில் மைந்தன் –

▲▲▲▲▲▲▲▲▲▲

▲▲▲▲▲▲

உலக வாழ்வின் நடைமுறையில் பல குடும்பங்களை நாம் பார்க்கின்ற போது, தந்தையாரினால் பிள்ளைகளுக்கு பெருமை, புகழ் உண்டாவதுண்டு. சில இடங்களில் பிள்ளைகளினால் தந்தைக்கு பெருமை வருவதுமுண்டு.

ஆனால்.....

அமரர், " சிவாகமஞானி " ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்களின் குடும்பத்தைப் பார்த்தால் தந்தையினால் பிள்ளைகளுக்கு பெருமை புகழ் ஏற்பட்டுள்ளது. அதே போல் பிள்ளைகளினால் தந்தைக்கு சிறப்பு ஏற்பட்டுள்ளது.

" தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல் "

அறிஞர்கள் கூடியுள்ள அவையில் பிறர் பாராட்டும் வகையில் கற்றவனாக மேம்பட வைப்பதே ஒரு தந்தை தன் மகனுக்குச் செய்யும் நல் உதவியாகும். என்ற வள்ளுவன் கூற்றுக்கு இணங்க பிள்ளைகளை உலக நாட்டில் ஆன்மீகப்பணி புரிந்து பாராட்டுக்களைப் பெறவைத்து அதன் மூலம் மன மகிழ்ச்சி கொண்டவர் சாம்பசிவ சிவாச்சார்யார்.

அவர்களின் புதல்வர்களில் ஒருவரான ஸ்ரீஜயப்பதாஸக் குருக்கள் தந்தையின் ஞாபகார்த்தமாக அருள்ஜோதி எனும் ஆன்மீக மாத இதழ் வெளியிடுவது பாராட்டுக்குரியது. இதனை ஆன்மீகப்பெருமக்கள் படித்துப் பயன் பெற இறை அருள் வேண்டி ஆசீர்வதிக்கிறேன்.

– சுபம் –

" பிரதிஷ்டா சிரோமணி "
சாமி. விஸ்வநாதக்குருக்கள்
(நவாலியூர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

எமது அன்புத்தந்தையாரும், இலங்கை – இந்துமத குருபீடாதிபதியுமாகிய, " சிவாகமஞானி " அருள்ஜோதி " கலாநிதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சார்யார் அவர்கள் கடந்த 06.02.1997 அன்று கொழும்பில் சிவபத மெய்தினார்.

இறுதிக்கிரியைகள் அகில இலங்கை சபரிமலை ஸ்ரீ சாஸ்தாபீடத்தில் நடைபெற்றது. எமது தந்தையார் அவர்களின் ஞாபகார்த்தமாக கொழும்பு – இந்துமத குருபீடம் 25.02.97 அன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது என்பதனை ஆன்மீகப் பெருமக்களுக்கு அறியத்தருகின்றோம்.

மேலும் சிவாச்சார்யார் அவர்களின் ஞாபகார்த்தமாக " அருள் ஜோதி " எனும் ஆன்மீக மாத இதழை வெளியிட வேண்டும் என பல குருமார்கள், சமயப் பெரியார்களின் வேண்டுகோளுக்கிணங்க கொழும்பு – இந்துமத குருபீடம் மாதந்தோறும் வெளியிடவுள்ளது.

சிவாகமக்கட்டுரைகள், சமயக்கட்டுரை, இதிகாசக்கட்டுரை ஜோதிட சம்பந்தமான கட்டுரைகள், இந்துமதவினா? விடைகள் முக்கியமான செய்தித் தொகுப்புகள் என்பனவற்றை தாங்கி வருகிறது. " அருள்ஜோதி "

ஆன்மீகப் பெருமக்கள் ஒவ்வொருவரும் " அருள்ஜோதி " ஆன்மீகமாத இதழின் சந்தாக்காரராக சேர்ந்து எமது ஆன்மீகப்பணிகளுக்கு ஒத்துழைப்புக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

ஆன்மீகப் பெருமக்கள் அனைவருக்கும் " அருள்ஜோதி " பயனுடையதாக அமைய எமது அன்புத் தந்தையாரின் இதயத்தில் குடிகொண்ட நாயன்மார்கட்டு அருள்ஜோதி ஸ்ரீதேவி இராஜராஜேஸ்வரி அம்பாளின் திருவடித்தாமரைகளில் திரிகரண சுத்தியுடன் சமர்ப்பணம் செய்கிறேன்.

**அம்பாள் ஆசீர்வாதம்**

90/22, ஜோசப் டயஸ் லேன்,
புளூமென்டால் ரோட், கொழும்பு – 15,
ஸ்ரீலங்கா.
T.P. 527025

கொழும்பு – இந்துமதகுருபீடம்
கலாநிதி ஸ்ரீஐயப்பதாஸன் சாம்பசிவ சிவாச்சார்யார்
(அகில இலங்கை சமாதான நீதவான் )
சபரிமலை ஸ்ரீ சாஸ்தாபீடாதிபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து குருபீடாதிபதி அவர்கட்கு
## அகில இலங்கை இந்துமத குருமார் ஒன்றியத்தின்
## இரங்கலுரை

வேதமுடன் ஆகமமும் வியாகரணம்
விளங்கு சித்தாந்தமொடு உபநிடதம்
போதமுற செந்தமிழும் பதினெண்புராணம்
புகழ் பூத்த மாந்திரீகம் சித்தவைத்தியம்
பூதலத்தில் பல கோவில் குருவாய் நின்று
புண்ணியம் சேர் கும்பாபிஷேகம் பல செய்து
வேதியரில் முதன்மை பெற்ற குருவாய் ஆகி
குருபீடாதிபதியென்று உயர்ந்து நின்றீர்.

ஜோதிடமும், சிற்பகலை சாஸ்திரம் பலவும்
சோபனாய் வாழ்வித்தை, சிலம்புவித்தை
யோகமுடன் பலகலையும் தெரிந்த செம்மல்
யவ்வனமாய் உபன்யாசம் செய்யும் மன்னன்
போதகராய், பெருங்குருவாய் வாழ்ந்த அண்ணல்
புகழ்பெற்ற வைதீக நூலின் ஆசான்
வேதியரின் தலைமகனே! வீர செம்மல்
விரைந்தெங்கு சென்றனையோ எம்மை விட்டு.

நித்யமும் நித்யாக்கி வளர்த்தே ஹோமம்
நெஞ்சார சிவபூசை விதிமுறையாய்
பக்தியுடன் புரிந்து வந்த ஞான பானு
பாய் கிடந்து நோவாமல் சென்றீர் ஐயா
வித்தகரே! குருபீடாதிபதியே உம்போல்
வேறொருவர் உதிப்பாரோ இந்த மண்ணில்
சத்தியமே சொல்லுகிறேன் இனிமேல் இல்லை
சரியாத இமயம் இன்று சரிந்ததய்யா

**கொழும்பு- இந்துமத குருபீடம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதம்

பேராசியர், கலாநிதி. கா. கைலாசநாதக்குருக்கள், M. A, Ph. D;

வேதம் அறிவுக் கருவூலம், தருமத்தை அறியத்தருவதனால் இதற்கு இப்பெயர் உண்டாயிற்று என்று அறிஞர் கூறுவர். இவ்வறிவு நூல் எல்லாமாய் அமைந்து மக்களுக்கு வாழ வழி காட்டுவது இஃது உயரிய குறிக்கோளாகிய வீடு பேற்றினை எய்துவிப்பது; தெய்வீகமானது; இறைவனாலேயே அருளிச் செய்யப்பட்டது.

வேதத்தின் சிகரமென விளங்குவது பெருமானின் திருநாமத்தை உருவாக்கும் சிவ என்னும் ஈரெழுத்துக்கள். இவ் வீரெழுத்துக்களால் திருவைந்தெழுத்துக்கள் பொலிந்து விளங்குகின்றன. இவ்வைந்தெழுத்துக்கள் உருத்திராத்தியாயத்தை அணிசெய்கின்றன. இவ்வத்தியாயத்தினால் யசுர் வேதத்தின் நாலாங்காண்டம் அழகுறுகின்றது. இந் நாலாங் காண்டத்தினால் யசுர் வேதமே சிறப்படைகின்றது இருக்கு சாமம் என்னும் இரண்டின் நடுவே ஒளிரும் இம்மத்திய மணியால் வேதமுழுவதுமே அழகு பொலிந்து விளங்குகின்றது. வேதம் சைவத்திற்கு அடிப்படைநூல், இதற்குப் பாஷ்ய வடிவில் நின்று பொருளுரைப்பன சிவாகமங்கள். வேதம் பொது நூல். ஆகமம் சிறப்பு நூல். இவை இரண்டிற்குமிடையே வேறுபாடு காணமாட்டார்கள் பெரியோர்கள். வேதங்களின் மூலப் பகுதிகள் சங்கிதைகள்.

---

1. "வேதோகிலோ தர்மமூலம்."

2, விதந்தி அநேந தர்மம் வேத:

3. "பஞ்சாக்ஷரீ சிவபதேந விபாதி ருத்ராத்
யாயஸ் தயாஸ்புரதி தேந சதுர்த்த காண்ட:
காண்டேந சர்வ யஜுரேவ விபாதி தேந
ரிக் சாம மத்யமணிநா ச விபாந்தி வேதா:"

4. சுருதி சாரமய: ச்ரௌத:

5. "வேதமோ டாகமும் மெய்யாம் இறைவனூல்
ஓதும் பொதுவுஞ் சிறப்புமென் றுள்ளன
நாதன் உரையவை நாடில் இரண்டந்தம்
பேதம தென்பர் பெரியோர்க் கபேதமே"
"லயம் துவேத சிவாகமயோர்
பேதம் நபச்யாம: வேதோபி சிவாகம:"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராமணங்களும் ஆரணியங்களும் உபநிடதங்களும் இவை உணர்த்தும் உண்மைக் கருத்துக்களைச் சிறிது விரித்து விளக்கந் தருவன. இவ்வாறு உணர்த்தவும் உணரும் ஆற்றலற்ற பாமர மக்களுக்கு வேதநெறி நின்று அவரவர்க்கு ஏற்ற நிலையில் பொருளை விளங்கவைப்பன இதிகாச புராணங்கள்.

தேவாரங்கள் வேதசாரமாய்த் திகழ்கின்றன. பெரியபுராணம் ஈறான திருமுறைகள் பன்னிரண்டும், சித்தாந்த நூல்கள் பதினான்கும் வேதத்தை முதனூலாகக் கொள்வன. சாங்கியம் முதலான புறச்சமயங்களுக்கும் வேதமே அடிப்படை நூல் இவை யாவும் வேதத்தின் முக்கியத்துவத்தினை ஒருமுகமாகச் சுட்டி நிற்கின்றன.

இறைவன் திருவருளால் வேத முழுதும் சுருக்கவடிவம் தாங்கிற்று இச்சுருக்கம் இருபத்துநான்கு அட்சரங்களால் அமைந்து விளங்கும் காயத்திரி ஆகும். "சூரியனின் நடுவணுறைபவர் சிவபெருமான். அவர் எங்கள் புத்தியைத் தூண்டுபவர். அந்த முக்கியப் பொருளைத் தியானிக்கின்றோம்." எனச் சிவபெருமானைத் தானுணர்ந்தும் பொருளாய்ச் சுட்டி நிற்பது காயத்திரி மந்திரம்.

6, வேதங்களில் கூறப்படும் விபூதி, உருத்திராக்கம், பிராசாதம், பஞ்சாட்சரம், பதி, பசு, பாசம் என்பன காமிகம் முதலிய ஆகமங்களில் விரிக்கப்பட்டிருக்கக் காண்கின்றோம். இதனாலே இவை சிரௌதம் எனப் படலாயிற்று. சுருதி சம்பந்தப்பட்டது சிரௌதமாம், சுருதியில் எடுத்துச் சுட்டப்படாதனவான ஆலயவமைப்பு, பிரதிட்டை, உற்சவம் முதலியவற்றை ஆகமங்கள் தாமாகவே கூறுவதனால் இவை சுவதந்திரம் எனப்படலாயின. இதுபற்றியே வேதங்கள், முக்கியமாக உபநிடதங்கள், இதிகாசங்களையும் புராணங்களையும் ஆகமங்களையும் துணைக்கொண்டு விளக்கற்பாலன.

7. தேவஸ்ய சவிதுர் மத்யே
யோ பர்க்கோ நோ தியः க்ரமாத்
ப்ரசோதயாத் தத் வரேண்யம்
தீம ஹீத் யந்வயः க்ரமாத் //

வேத நான்கினும் மெய்ப்பொருளாவது.................. நமச்சிவாயவே. நம் என்னும் வினையடிக்கு வளைதல் (வணங்குதல்) என்னும் பொருள் உண்டு. சிவாய்நம என்னுந் திருவைந்தெழுத்தின் ஈறாகிய நம என்பது சிவனை நோக்கி வளைதல், வணங்குதல், சாருதல் எனப் பொருளுணர்த்தி மும்மலங்களினின்றும் நீங்கிச் சிவத்துடன் சாரும் சிவாத்துவித நிலையை யுணர்த்தும் பெருமைவாய்ந்த மந்திரமாகி வேதமுணர்த்தும் வீடுபேற்றைச் சுருக்கமாக உணர்த்தி வேதப்பொருளாகிய இறைவனைச் சுட்டிநிற்பது நோக்கற்பாலது.

வேதத்தின் சாரம் பிரணவம். அ, உ, ம் ஆகிய மூன்றெழுத்துக்கள் ஒன்றி விரவ, ஓம் என்னும் பிராணவம் பிறந்தது. இறைவன் இருக்கு வேதத்திலிருந்து அகாரத்தையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யசுர் வேதத்திலிருந்து உகாரத்தையும் சாமவேதத்திலிருந்து மகாரத்தையும் தேறலாக வடித்தெழுத்து எமக்கு அருளியுள்ளான். இவ் வொலியினை உபநிடதங்கள் பிரமம் எனச்சுட்டும். வளர்ந்து விரிந்து வியாபித்து நிற்பது பிரம்மம்.

இவ்வொலியும் இவ்வாறேநிற்றதால் பிரம்மம் எனப்படலாயிற்று ஓம் என்னும் ஒலிக்குள் ஒலியினங்கள் அனைத்துமே அடங்கி நிற்பது நோக்கற்பாலது ஒலிக்கும் நோக்குடன் வாயை அங்காக்கும்வேளை பிறக்கும் அகரத்தைத் தொடக்கத்திற் கொண்டும் ஒலித்து முடியும்வேளை வாயை மூடும்பொழுது பிறக்கும் 'ம்' என்னும் ஒலியை ஈற்றிற் கொண்டும் அமைவதானால் பிரணவஒலி வாய்திறப்பது முதல் வாய் மூடும் வரை பிறக்கவல்ல எல்லா ஒலிகளையும் உள்ளடக்கியுள்ளது என்பது உய்த்துணரற்பாலது. இதிலிருந்து சப்தபிரபஞ்சம் முழுவதையுமே வியாபித்து விளங்குவது வேதம் என்பது தெளிவாகின்றதல்லவா ஒலிகள் யாவும் வேதத்துள் அடங்குவனவாதலால், அவையுணர்த்துங் கருத்துக்களனைத்தையும், எனவே எவ்வகைக் கருத்துக்களையுங் கொண்டு விளங்குவது வேதம் என்னும் உண்மையும் உணரப்படுகின்றது.

8. அகாரஞ்சாப் யுகாரஞ்ச
மகாரஞ்ச ப்ரஜாபதி:
வேதத் த்ரயாத் நிரதுஹத்.

9. ஏதத் யேகாக்ஷரம் பிரம்ஹ
ஏதத் யேகாக்ஷரம் மஹத்
ஏதத்யேகாக்ஷரம் ஞாத்வா
யோயத் இச்சதி தஸ்யதத் ஓம் இத்யேதத்
ஓமிதி பிரஹ்ம.

10. பிருஹத்வாத் பிரஹ்மணத் வாச்ச
சிவோ பிரஹ்மைவ யோகத: !
பிரமம் என்னுஞ் சொல் ப்ரம்ஹ என்னும் அடியிற் பிறந்தது! இது ப்ரம்ஹணம் என்னும் வளர்ச்சி வன்மையையும் பிருஹத்வம் என்னும் மேன்மையையும் உடையது.

11. அகரம் தொடங்கும் எழுத்தாய் ஒலிகளெல்லாவற்றுக்கும் அடிப்படையாய் நிற்றல் பற்றியே, "அக்ஷராணாம் அகாரோஸ்மி" என்றும் "அகர முதல வெழுத்தெல்லாம்" என்றும், 'அகர வுயிர்போல்....... இறை நிற்கும் நிறைந்து' என்றும் நூல்கள் கூறுகின்றன.

வேதம் மக்கள் சீராக வாழ வழிகாட்டும்; அவர்கள் பெற விழையும் பெரும் பேற்றை அடைவிக்கும். மக்கள் நிற்றற்குரிய நிலைகள் நான்கு. இவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன இவற்றுள் ஏதாவது ஒன்றைப் பற்றாது மக்கள் வாழ்தல் அரிது. இந்நான்கு நிலைகளையுமே கூறும் விஷயமாகக் கொண்ட வேதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களுக்கு வேண்டிய தனைத்தையுங் கூறும் நூலாயமைந்திருப்பதில் வியப்பென்ன இருக்கின்றது? நெறிகள் நான்கினுள் முதலாவதான சரியைநெறி நிற்பானுக்கு உரியவை சங்கிதைகள், வேள்வி முதலிய கிரியைகளிலே முற்றிலும் ஈடுபடுபவனாகிய கிருகஸ்தனுக்கு உரிய வேதப்பகுதிகள் பிராமணங்கள், கிருகஸ்த நிலையினின்றும் நீங்கிக் காடு நோக்கிப் புறப்பட்ட வானப்பிரஸ்தனுக்கு உரியவை ஆரணியங்கள். வேதத்தின் முடிவான உபநிடதங்கள் சந்நியாசிக்கு வழிகாட்டுவன. மக்களனைவர்க்கும் அவரவர் தகுதிப்படி நிற்கவல்ல வழியைக்காட்டும் வேதம் . எல்லாமாய் வியாபித்து நிற்பது மட்டுமன்றி எல்லோர்க்கும் நிலைக்களனாய் விளங்குவதும் குறிப்பிடத்தக்கது. பேரும் உருவும் அற்ற இறைவன் மக்களுக்கு அருளவேண்டி ஏற்றருளிய தோற்றங்கள் பல. அவற்றுள் ஓசை ஒலியெலாமமையும் வேத சொருபமும் ஒன்று என்னும் உண்மையை நமது சமய நூல்கள் அழகாக எடுத்தியம்புகின்றன.

ஆகவே அறிவு மயமாய், சிவ என்னும் திருநாமத்தை நடுமணியாகக்கொண்டு, சிவாகமங்களினின்றும் வேறாகாதாய், அவற்றினால் சிறப்பித்துக் கூறப்படுவதாய், இதிகாச புராணங்களால் விளக்கப்படுவதாய் திருமுறைகளுக்கும் சித்தாந்த நூல்களுக்கும் முதல்நூலாய், சுருக்கவடிவில் காயத்திரியாய், இன்னுஞ் சுருங்கிய வடிவில் பிரணவமாகி ஒலிகளெல்லாவற்றையும் தன்னுள் அடக்கிதாய், எப்பொருளையும் உணர்த்தும் பெற்றிதாய், சரியை நிற்கும் பிரமசாரிகட்கும் கிரியை நெறி மேற்கொள்ளும் கிருகஸ்தருக்கும் இல்வாழ்க்கையைத் துறந்து துறவறம் மேற்கொள்ளவிழையும் வானப்பிரஸ்தர்களுக்கும் சந்நியாசிகட்கும் அவரவர் நிற்கவேண்டிய நெறியுறுத்துவதாய் என்றும் விளங்கி நிற்பது வேதம்.

**"வேதங்காட்டும் சைவநெறி**
**விளங்குக உலகமெல்லாம்"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உபநிஷதமும் திருமுறையும்

**கலாநிதி, நாகராஜஐயர் சுப்பிரமணியன்**
முதல்நிலை விரிவுரையாளர் தரம் 1.
தமிழ்த்துறை, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்

இந்து மதத்தின் மூலாதாரமாகத் திகழ்வது வேத இலக்கியம். வேதங்களின் சாரம் உபநிடதங்கள். இதனால் உபநிடதங்கட்கு வேதசிரஸ் என்றவொரு பெயருமுண்டு. உண்மைப் பொருள் தொடர்பான ஆராய்ச்சியிலே ஈடுபட்ட அறிஞர்களின் பொருள்பொதித்த உரையாடல்களே உபநிடதங்களாக அமைந்துள்ளன. இந்த உரையாடல்கள் தொடக்கிவைத்த உண்மைப்பொருள் தொடர்பான ஆராய்ச்சியே தத்துவங்களாக விரித்து பரந்தது.

சைவசமயத்தில் பக்திப் பேரியக்கத்தின் உணர்ச்சிப் பெருக்காகத் திகழ்வன திருமுறைகள், சித்தத்தைச் சிவன்பால் வைத்துக் ' காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கிய ' 'வீடும் வேண்டா விறலின் ' விளங்கிய நாயன்மார்களின் உள்ளத்தில் ஊற்றெடுத்த இசைகலந்த தமிழ்ப் பாடல்கள் அவை.

ஆராய்ந்து அறிந்த உண்மைகள் உபநிடதங்கள். அனுபவித்த உணர்ச்சியின் வெளிப்பாடுகள் திருமுறைகள், இரண்டும் இருவேறு காலப்பகுதிகள் வாழ்ந்த இரு வேறு இயல்பூக்கங்களால் தூண்டப்பெற்ற பெருமக்களின் வெளியீடுகள். இவ்வாறு இவையிரண்டும் வேறுபட்ட பண்புகளையுடையனவெனினும் இவற்றினை அடிப்படையில் இணைத்து நிற்கும் அம்சங்கள் உள்ளன. இரண்டும் இந்து சமணம் என்ற பெருமரத்தின் இருவேறு நிலைகள். உபநிடதங்கள் தத்துவ வேர், திருமுறைகள் பக்திக் கனிகள்.

கால அடிப்படையில் நோக்கும்போது உபநிடதங்கள் திருமுறைகளுக்குப் பல நூறு ஆண்டுகட்கு மூத்தவை. வேத இலக்கியத்தின் இறுதிப் பகுதியான ஞான காண்டமாக அமைவன அவை. அடுத்து இதிஹாச புராணங்களும், தர்மசாஸ்திரங்களும் எழுந்தன. இதிஹாச, புராணங்களின் செல்வாக்குத் தமிழ் நாட்டில் பரவிய காலப் பகுதியில் பரசமயங்களை எதிர்த்து உருவாகிய சைவ பக்தி இயக்கத்தின் கனிகளே திருமுறைகள். தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா முதலிய திருமுறைகளில் பாடப்படும் முக்கிய அம்சங்கள் இறைவனாகிய சிவபிரானின் தோற்றப்பொலிவும், அருட்சிறப்பும், அதை அனுபவித்த ஆன்மாவின் பரவச நிலையுமாகும். இறைவனின் தோற்றப் பொலிவையும், அருட்சிறப்பையும் சித்திரிக்கும் வகையில் திருமுறைகளுக்குப் புராணக்கதைகள் பெருமளவு ஆதாரமாக அமைந்துள்ளது. புராணங்களில் இடம் பெற்றுள்ள இறைவனைப் பற்றிய வருணனைகள் உபநிடதங்களிலே கூறப்பட்ட பரமாத்மாவான பிரமத்தின் இயல்புகளை அடிப்படையாகக் கொண்டன. உபநிடதங்கள் தத்துவ ரீதியில் விளக்கிய அம்சங்களையே புராணகாரர்கள் கதை வடிவில் கூறினர். நாயன்மார்கள் அவற்றை அனுபவித்து, உணர்ந்து, உளமுருகிப்பாடினர். வரலாற்றுப் போக்கை உணரும் போது உபநிடதக் கருத்துக்கள் திருமுறைகள் உருவாவதற்கு எந்த அளவிற்கு ஆதாரமாக அமைந்துள்ளன என்பது புலனாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதங்களையும், உபநிடதங்களையும் ஒருசேர இணைந்து நோக்கிய அறிஞர் பெருமக்கள். தேவாரங்களை வேதசாரமென்றும், திருவாசகத்தை உபநிஷத்சாரம் என்றும் ஆராய்ந்து கூறியுள்ளார். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் மாணவராகிய காசி வாசி செந்திநாத ஐயரவர்கள் தேவாரம், வேதசாரம் என்றதலைப்பில் அரியதொரு நூல் செய்துள்ளார். மணிவாசகப் பெருமானின் திருவாசகத்திற்கு உரை கண்டவர்களுள் ஒருவர் சுவாமி சித்பவானந்தா. இவர் திருவாசகப் பாடல்கள் பலவற்றுக்கும் பொருட்பொருத்தந்தரும் உபநிடத மந்திரங்களை எடுத்துக் காட்டியுள்ளார். இவ்வாறு இருவகை நூல்களையும் இணைந்து நோக்குவது தத்துவத்தெளிவும் பக்திச் சுவையும் ஒருங்கிணைந்த மெய்நெறிக்குத் துணைபுரியும் ஓர் அனுபவமாகும்.

உபநிடதங்களிலே பேசப்படும் விஷயங்களிலே முக்கியமானது பரம்பொருளாகிய பிரம்மம். இதனை பரமாத்மா என்றும், உடலை இயக்குஞ் சக்தியாகிய உயிரைச் ஜீவாத்மா என்றும் குறிப்பிடுவர். பிரமத்தைப்பற்றி உபநிடதங்கள் கூறுஞ் செய்திகளில் ஒன்று அது அறிவிற்கு எட்டாததும் புலன்களால் அறியமுடியாததுமாகும் என்பதாகும்.

**" யத் வாசா அனப் யுதிதம்**
**யோகவாக் அப்யத்யதே**
**தத் வை ப்ரம்மம் த்வம் வித்தி**
**நஇதம் யத் இதம் உபாஸதே**
**யத் சக்ஷு ந பஸ்யதி**
**யன் மனசா ந மனுதே"**

என்கிறது கேனோபநிடதம். சொல்லால் பிரமத்தை விளக்க முடியாது. ஏனெனில் சொல் அதிலிருந்தல்லவா உண்டாகின்றது. கண்களாற் பிரமத்தைக் காணமுடியாது. ஏனெனில் கண்பார்ப்பதே பிரமத்தாலேதான். பிரமத்தை மனத்தால் சிந்திக்கமுடியாது. ஏனெனில் மனம் சிந்திப்பதே பிரம்மத்தினாலே தான். இவ்வாறு ஐம்புலன்களும் மனமும் அணுகமுடியாதது பரம்பொருள் என்பதனைக் கடோபநிடதமும் எடுத்துக் காட்டுகின்றது. பிரமத்தின் இந்த அறியப்படாத நிலைதான் மிக உயர்ந்த நிலை. இதுவே நிர்க்குணப் பிரம்மநிலை. இந்துசமயம் முழுவதிலும் இழையோடியுள்ள இப்பிரம்ம தத்துவம் திருமுறை ஆசிரியர்கள் பலராலும் சிந்திக்கப்பட்டுள்ளது. " அரியானை அந்தணர்தம் சிந்தையானை " என்ற திருத்தாண்டகத்திலே அப்பர் பெருமான் இறைவனை " யார்க்குந் தெரியாத தத்துவன் " என்றும் " கனலைக் காற்றை கனைகடலைக் குல்வானைக் கலந்து நின்ற கெரியான் " என்றும் வர்ணிக்கின்றார். " சித்தமுஞ் செல்வாச் சேட்சியன் காண்க " என்பர் மணிவாசகர். " உணர்வுசூழ் கடந்தோர் உணர்வே" என்கின்றது திருவிசைப்பா. " உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன் " என்கின்றது பெரியபுராணம்.

புலன்களாலும், மனத்தாலும் அறியப்படமுடியாத அந்தப் பரப்பிரம்மமே பிரபஞ்சம் முழுவதற்கும் ஆதார பூர்வமாக உள்ளது. எங்கும் நிறைந்தது. சர்வம் பிரம்மமயம் ஜகத். ஒருவனாகிய தேவன் எல்லா வஸ்துவிலும் மறைந்து நிற்கின்றான் என எடுத்துரைக்கின்றது சுவேதாஸ்வதர உபநிடதம் ஈசாவாஸ்ய உபநிடதத்திலே,

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

" பூர்ணமத பூர்ணமிதம் பூர்ணாத் பூர்ண முதச்யதே! பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவ அவசிஷ்யதே" என்ற சாந்தி பாடம் இறைவனின் பரிபூர்ண நிலையை விளங்குவது. " ஈஸா வாஸஸ்யம் இதம் ஸர்வம்" என்பது அதன் தொடக்க சுலோகம். இறைவனே இந்த உலகப்பொருட்கள் யாவற்றையும் மூடிமறைத்து எங்குமாகிப் பரந்துள்ளான் என்பது இதன் பொருள்.

கனவிலும் நனவிலும் பார்க்கப்படும் அத்தனை பொருட்களுக்கும் ஆதாரமாக இருப்பவன் பரமாத்மாவே என்கிறது கடோபநிடதம்.

சுவேதாஸ்வதர உபநிடதம் " எள்ளில் எண்ணெய் போலவும் தயிரில் நெய் போலவும் ஊற்றுக்களில் நீர் போலவும் விறகில் தீபோல்வும் இந்தப் பரமாத்மா ஜீவாத்மாவிடம் உளது" என்கிறது.

இவ்வாறு உபநிடதங்களில் பலவாறாகக் கூறப்பட்ட பிரம்மலக்ஷணத்தின் திரண்ட கருத்துக்களை நாவுக்கரசு பெருமான்:-

**" விற்கிற் றீயினன் பாலிற்படு நெய்போல்**
**மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்"**

என்றும்,

**" ஞாயிறாய் நமனுமாகி வருணனாய்ச் சோமனாகித்**
**தீயறாநிருதி வாயு திப்பிய சாந்தனாகி "**

என்றும் பிரம்மம் எல்லாமாய் அல்லவுமாய் நிற்கும் நிலையைச் சித்தரிக்கின்றார். திருமூலர் தமது திருமந்திரத்தில்

**" மரத்தை மறைத்தது மாமதயானை**
**மரத்துள் மறைந்தது மாமதயானை**
**பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்**
**பரத்துள் மறைந்தது பார்முதல் பூதம் "**

என்கிறார். பரத்துள் மறைந்தது பார்முதல் பூதம் என்ற இறுதி வாக்கியம் ' ஈஸாவாஸ்யம் இதம் ஸர்வம்' என்ற ஈஸாவாஸ்ய உபநிடதத்தின் நேரடித்தமிழ்க் கருத்தாகவே அமைந்துள்ளமை ஒப்புநோக்குவோர்க்குச் சுவை பயப்பது.

சகலவற்றுக்கும் மூலதாரமான பரப்பிரம்மம் பேரொளிப் பிழம்பு என்றும் அந்த ஒளிப்பிழம்பு அனுபூதிமான்களின் உணர்விலேயே புலப்படும் எனவும் கடோப நிடதம் கூறும். திருமுறைகள் காட்டும் இறையியல்பும் இத்தயைதே!

**" பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே"**

என்றும்

**" ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதி "**

என்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சோதியாய்த் தோன்றும் உருவமே அருவாம் ஒருவனே சொல்லுதற்கரிய ஆதியே' எனவும் திருவாசகம் அழைக்கும்.

" ஒளிவளர் விளக்கு" என்கிறது திருவிசைப்பா. இந்த ஒளிப்பிழம்பு 'ஒராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே' என்றும் சிந்திப்பார் உள்ளத்தில்

**" கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற்போல**
**சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி"**

நிற்பது என்றும் அனுபவித்துக் கூறினார் மணிவாசகர்.

இப்பரம்பொருள் தானே முழுமுதலாகவும் பல்வேறு உயிர்களிற் கலந்தும் விளங்கும் இயல்பினை சுவேதாஸ்வர உபநிடதம்

' ஏக ஏகோசர்வபூதேஷு ' என்கிறது. இதனை சம்பந்தப்பெருமான் தனது திருவெழுக் கூற்றிருக்கையிலே

**" ஓருருவாயினை மானாங்காரத்**
**தீரியல் பாயொரு விண்முதல்**
**ஒன்றிய இருசுடர் உம்பர்கள் பிறவும்**
**படைத்தளித் தழிப்பமும் மூர்த்திகளாயினை"**

என்கின்றார் மணிவாசகப்பெருமான்.' ஏகன் அனேகன் இறைவன் அடிபோற்றி என்கின்றார். இவ்வாறு உபநிடதங்களிலே ஞானியர் நோக்கிக் கண்ட இறையியல்பு பற்றிய உண்மை திருமுறைப் பாவலர்களின் உணர்வில் அநுபவப் பிழம்பாக வெளிப்படுஞ் சிறப்பு சிந்திப்போர்க்கு இன்பஞ் செய்யவல்லது.

சாந்தோக்ய உபநிடதம் சிவனாகிய பரம்பொருளை 'அட்டமூர்த்தி' என்றும் வர்ணிக்கின்றது.

**" ஏஷ ஆத்மா பஹதே பாப்மா**
**விஜரோ விம்ருத்யுர்**
**விஸோகோ விஜ்சிப் லோபிபாஸஸ்**
**ஸத்ய காமஸ் ஸத்ய ஸங்கல்ப'**

என்பது அந்தச் சுலோகம் பரமாத்மா ஆனவர் பாவம், மூப்பு, மரணம், சோகம், பசி, தாகம் ஆகியன அற்றவர். சத்யத்தால் விரும்பப்படுபவர். சத்ய சங்கற்பராக உள்ளவர். இக்குணங்களின் சங்கமத்தாலேயே பின்னர் இறைவன் எண்ணன் என்ற தத்துவம் வளர்ந்தது. மணிவாசகர் பெருமான் இறைவனைப் 'போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியன்' எனறு வர்ணிப்பதும் இங்கு நோக்கத்தக்கது.

மேற்கூறிய சாந்தோக்கிய உபநிடதத்திலே ஓங்காரம் என்றும் பீஜாட்சரத்தின் மேன்மை கூறப்படுகின்றது. ஓம் என்ற பிரணவ மந்திரத்தை உச்சரிப்பவன் மரணத்தை வெல்வான் என்றும், அதனை உச்சரிப்பது அமிர்தச்சுவை தருவது என்றும் அவ்வுபநிடதம் கூறுகின்றது. ஓம் என்ற பிரணவம் பிரம்மமாகிய பரம்பொருளைச் சுட்டும் ஒலிவடிவமாகவே உள்ளது என்பது தெளிவாகின்றது. இந்த ஓங்காரத்துள் நமசிவாய என்ற ஐந்தெழுத்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரெழுத்தாம் தன்மையில் சூக்ஷுமமாகி உள்ளனவென்பது சைவசிந்தாந்த அடிப்படை.

இத்தகைய சைவசித்தாந்தச் சிந்தனை வளர்ச்சிக்கும் வழிசமைக்கும் வகையிலே திருமுறைகளிலே சூக்ஷும பஞ்சாட்சரமாகிய ஓம்காரமும் தூலமாகிய நமசிவாயவும் சிறப்பாக இடம்பெற்றுள்ளன.

**"ஒருசுடராய் உலகேழுமானான் கண்டாய்**
**ஓங்காரத்துட் பொருளாய் நின்றான் கண்டாய்"**

என்கின்றார் நாவுக்கரசர்.

சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் மூவருமே நமசிவாயப் பதிகங்கள் பாடியுள்ளனர்.

**"காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி**
**ஓதுவர் தமை நன்னெறிக் குய்ப்பதும்**
**வேதநான்கினும் மெய்ப்பொரு ளாவது**
**நாதன் நாமம் நமசி வாயவே"**

என்று "நமசிவாய" வின் பெருமை விரித்துரைக்கப்படக் காணலாம். மணிவாசகப் பெருமான் தமது திருவாசகத்தின் முதற்பாடலில் 'நமசிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க' என்றே தொடங்கியுள்ளார்.

இவ்வாறு பரம்பொருளின் இயல்புகள் தொடர்பாகவும் மூலமந்திரந் தொடர்பாகவும் உபநிடதங்கள் கூறியவை திருமுறைகளில் பயின்றுள்ளமை விரிக்கின் பெருகும்.

உபநிடதங்களில் பரமாத்மாவை அடுத்துக் குறிப்பிடப்படும் முக்கிய பொருள் ஜீவாத்மாவாகும். உபநிடதம் கூறும் பரமாத்மாவும், ஜீவாத்மாவும் ஒன்றா அல்லது இரண்டா என்பது தத்துவ ஆய்வாளர்களுக்குரியது. பக்திமான்கள் இந்த ஆராய்ச்சியில் இறங்கவேண்டியதில்லை. திருமுறை பாடிய நாயன்மார்கள் பக்தர்கள் த்த்துவ ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்டவர்கள். அவர்கள் தம்மையும் இறைவனையும் வேறுபடுத்தி இருபொருள்களாகவே உணர்ந்தவர்கள். இறைவனிடம் ஆன்மா செய்துறு இன்புற்றிருக்க வேண்டும். இதுவே அவர்களது குறிக்கோள்.

உபநிடதங்களிலே ஜீவாத்மாவையும், பரமாத்மாவையும் வேறுபடுத்திக்காட்டும் அம்சங்களும் உண்டு. சுவேதாஸ்வதர முண்டக உபநிடதங்களிலே ஒரு மரக்கிளையில் இருக்கும் இரு பறவைகளைப் பற்றிய செய்தி உண்டு. ஒரு பறவை பழத்தைச் சுவைப்பது. மற்றது அதனைப் பார்த்திருப்பது.

இந்த உடலுக்குள்ளேயே ஜீவாத்மாவும், பரமாத்மாவும் இணைந்து இடம் பெற்றுள்ளனர். ஜீவாத்மா உலக விடயங்களில் ஈடுபட்டு இன்பதுன்ப அனுபவம் பெறுகின்றது. இன்னொன்று புலன்வழிப்படாமல் மற்றதை அவதானித்து நல்வழிப் படுத்த முயல்கின்றது என்ற கருத்தைத் தரத்தக்க வகையில் அமைந்த இவ்வுபநிடதக் குறிப்பு

**"காயமே கோயிலாகக் கடமனம் அடிமையாக**
**வாய்மையே தூய்மையாக மனமணி இலிங்கமாக"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமையும் உடலாகிய கோவில் பற்றிய திருமுறைச் சிந்தனைக்கு தூண்டுகோலாக அமைந்திருக்கலாமென எண்ணவைக்கின்றது.

உடல் என்ற கட்டுக்குள் உறைகின்ற ஆத்மாவை நன்னெறிப்படவிடாது அலைக்கழிப்பவை ஐம்புலன்கள். இவை ஆத்மாவையை அலைய வைப்பதை விளக்க கடோப நிடதம் ஒரு அரிய உருவகத்தை கையாளுகின்றது. எமது இந்த உடல் ஒரு இரதம். இந்த இரதத்தின் சாரதி புத்தி இரதத்தின் மேலமர்ந்து பிரயாணஞ் செய்பவன் ஆத்மா தேரை இழுத்துச் செல்லுங்குதிரைகள் ஐம்புலன்கள் தேர் பிரயாணஞ் செய்யும் பாதை உலக விடயங்கள். இந்தத்தேர் சரியாகப் பிரயாணஞ் செய்ய வேண்டுமெனில் புத்தியாகிய சாரதி நன்கு செலுத்தவேண்டும் அல்லது ஆத்மாவாகிய எஜமானின் பிரயாணஞ் சுகப்படாது! புலன்களாகிய குதிரைகள் நாம் விரும்பியவாறு ஓடிப் பிறப்பும் இறப்புமாகிய வட்டத்திற்குள் சுற்றிக்கொண்டே இருக்க நேரிடும். எனவே புத்தியை முழுமையாகப் பிரயோகித்து புலன்களைக் கட்டுப்படுத்தி நலன் வழிப் பிரயாணத்தைச் செய்யவேண்டும் என்பது கடோபநிடதம் வழங்குஞ் செய்தி.

உபநிடதத்துடன் ஒருங்குவைத்து எண்ணப்படும் பகவத்கீதை தோன்றிய போர்க்களக் காட்சி இந்த இடத்தில் நினைவிற்கு வருதல் தவிர்க்க முடியாதது. அர்ச்சுனனாகிய ஆத்மாவின் சாரதியாக கண்ணன் அமைந்து வழிநடத்தும் இயல்புபோல் புத்தி ஆன்மாவை வழி நடத்த வேண்டும் என்பது கீதைக்களம் காட்டும் போதனை.

மேற்கூறிய கடோபநிடதக் கருத்துக்களை வேறொரு வகையில் உருவகஞ் செய்து பார்க்கின்றார். திருமுறையாளரான திருமூலர் ஐம்புலன்களையும் ஐந்து பசுக்களாக உருவகிக்கிறார். அவை ஐந்தும் ஓர் மேய்ப்பான் இல்லாவிட்டால் வெறி கொண்டு திரியக்கூடியவை. ஒரு நல்ல மேய்ப்பான் கிடைத்து, அவனால் வெறி தணிக்கப்புட்டுக் கட்டி அவிழ்க்கப் படுமானால் அந்த ஐந்து பசுக்களும் பால் சொரியும் பசுக்களாகும். அப்பாலைப் பெற்று நாம் பலன்பெறலாம்.

> **"பார்ப்பானகத்திலே பாற்பசு ஐந்துண்டு**
> **மேய்ப் பானுமின்றி வெறித்துத் திரிவன**
> **மேய்ப்பானும் உண்டாய் வெறியும் அடங்கினால்**
> **பார்ப்பான் பசுவைந்தும் பாலாய்ச் சொரியுமே"**

என்பது திருமூலர் வாக்கு

இதே கருத்தை மாணிக்கவாசகப் பெருமான் வேறொரு வகையில்

> **"முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்**
> **பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்**
> **சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட**
> **அத்தன் எனக்கருளிவாறு யார் பெறுவார் அச்சோவே"**

உணர்ந்து உரைக்கின்றார்.

இவ்வாறு விடுதலையுணர்வு பெறுவதற்கு ஆன்மா மேற்கொள்ள வேண்டிய முயற்சியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முண்டக உபநிடதம் ஒரு வில்வித்தையை உருவகமாகக் கொண்டு விளக்குகின்றது. ஞானமாகிய வில்லிலே ஆன்மாவாகிய அம்மை வைத்து நம்பிக்கையாகிய நாணை இழுத்து திடசித்தத்துடன் குறியை நோக்கி எய்தல் வேண்டும். இதனை நாவுக்கரசர் தமக்கே உரிய பாணியில்,

**"உயிராவணம் இருந்து உற்றுநோக்கி**
**உள்ளக் கிழியில் உருவெழுதி"**

என்கிறார் உள்ளமாகிய திரையிலே இறையுருவை வரைந்து உயிராவண்ணம் மூச்சு விடாத ஜாக்கிரதையுடன் – பக்தி முயலவேண்டும், என்ற அவரது கருத்து அனுபபூர்வமானது.

இவ்வாறு உபநிடத அறிஞர் அறிந்த உண்மையும், திருமுறை கண்ட நாயன்மார்கள் அனுபவித்த உணர்வும் ஒரே இடத்தில் செல்லுஞ் சிறப்பு இந்துமதத்தின் தத்துவ நெறிக்கும் பக்திநெறிக்கும் இடையிலான தொடர்பை நன்கு சுட்டி நிற்கின்றது வேத வித்தில் முறைவிட்டு உபநிடத வேர் கொண்டு இதிகாச புராண, தர்மசாஸ்திர ஆகமப் பண்பாடுகளாக விழுதுவிட்டு வளர்ந்த இந்தப் பண்பாட்டுப்பெருமரத்தின் கனிகளே திருமுறைகள் என்பதை உணர இது தெளிவாகும்.

**மங்களம்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

" சிவஞானபானு "
பிரம்மஸ்ரீ சாம். சோமாஸ்கந்த சர்மா
(செயளாளர் - இந்துமத குருமார் ஒன்றியம்)
யாழ்மாவட்டம்

# உபநயனமும், விதிமுறைகளும்

உபநயனம் என்னும் சொல் உப நயனம் பிரிகிறது உப. என்பது பிரம் மத்திற்கு சமீபமாக, நயனம் - என்பது அழைத்துச் செல்லல். என பொருள்படும். மூன்றாவது ஞானக்கண்ணை திறந்தல் எனவும்.

உபநயனத்தில் ஆசார்யர் சிஷ்யனை ஒரு கல்லில்மேல் காலை ஊன்றச்செய்து ஆசீர்வதிப்பார்.

**"ஆதிஷ்டெ ம அஸ்மான அஸ்மேவ த்வகும் ஸ்திரொபவ**
**அபிதிஷ்ட பிருதன்யஸ் ஸஹஸ்வ பிருத நாயத!"**

**பொருள்:-** (சிஷ்யனே !) நீ தர்மசாஸ்திர விதிகளை புறக்கணிக்கும் உனது விரோதிகளை எதிர்த்து கல்லைப்போன்று உறுதியுடன் அவர்களை வெல் வாயாக! என்பதாகும்.

ஆசார்யரானவர் சிஷ்யனுக்கு கர்மானுஷ்டானங்களையும், காயத்திரி மந்திரத்தை உபதேசித்தும், மனோ தைரியத்தையும் வழங்குகிறார்.

உபநயனம் என்பதை சாதாரணமாக மக்கள் பூணூல் சடங்கு பூணூல் கல்யாணம் என்று சொல்லுவார்கள்


பூணூல் அணியப்படும் போது சொல்லப்படும் மந்திரமாவது

**யக்ஞோப வீதம் பரமம் பவித்திரம்**
**பிரஜாபதெர்யத் சஹஜம் புரஸ்த்தாத்**
**ஆயுஷ்ய மக்கியம் பிறதிமுஞ்ச சுப்பிரம்**
**யக்ஞோப வீதம் பலமஸ்து தேஜ:**

**பொருள்:-** "பரிசுத்தத்தை அளிக்கும் மிகச்சிறந்த பொருள் பூணூல் ஆதியில் பிரஜா பதி தோன்றும் போது அவருடன் தோன்றியது நீண்ட ஆயுளையும்" முதன்மைச் சிறப்பையும் தரும் இவ்வெண்மையான பூணூல் பலத்தை யும் ஞானஒளியையும் தேஜசும் கொடுக்கும்.

இநத உபநயனம் பெற்றதால் அந்தணர் த்விஜர் (இருபிறப்பாளர்) என பெயர் பெறுகின்றனர் இவர்கள் கர்மானுஷ்டானங்களை கடைப்பிடித்து வேதாத்யனம் செய்து வரவேண்டும். 'காயத்திரீ' மகாமந்திரத்தை தினமும் ஜெபிக்க வேண்டும். அப்போது அவர்களுக்கு பிரம்மதேஜஸ் உண்டாகிறது. 'காயத்திரீ' சந்தசாம் மாதா' வேதமந்திரங்களில் தாயாக விளங்குவது காயத்திரி மந்திரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவாச்சாரியாரின் .......

# ☆ அருள் ஜோதி ☆

எனும் ஆன்மீக மாத இதழ் அனைவருக்கும்
பயனுடையதாக மலர
சபரிமலை ஸ்ரீஐயப்பசுவாமியை
பிரார்த்திக்கிறோம்.

" சாமியே சரணம் ஐயப்பா "


" சிற்பகலைமணி "

## சரவணமுத்து ஜெயகாந்தன்

284, மோதர வீதி,
கொழும்பு - 15.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



சிவாச்சாரியாரின்........

# ❖ அருள் ஜோதி ❖

எனும் ஆன்மீக மாத இதழ் நறுமணம் கொண்டு
மலர எல்லாம் வல்ல ஸ்ரீ அம்பிகையை
வேண்டி அன்னை அருள்
அனைவருக்கும் ஜோதியாக
திகழ பிரார்த்திக்கிறோம்.

**" ஜெயலதா நகைமாளிகை "**

79, செட்டியார் தெரு,
கொழும்பு – 11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவாச்சாரியாரின் .......

# அருள் ஜோதி

எனும் ஆன்மீக மாத இதழ் நறுமணம் கொண்டு

மலர எல்லாம் வல்ல ஸ்ரீ அம்பிகையை

வேண்டி அன்னை அருள்

அனைவருக்கும் ஜோதியாக

திகழ பிரார்த்திக்கிறோம்.


## " யுனிமெக்ஸ் ஜுவல் ஹவுஸ் "

104, செட்டியார் தெரு,

கொழும்பு – 11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவாச்சாரியாரின் .......

# ☆ அருள் ஜோதி ☆

எனும் ஆன்மீக மாத இதழ் அனைவருக்கும்
பயனுடையதாக மலர
சபரிமலை ஸ்ரீஐயப்பசுவாமியை
பிரார்த்திக்கிறோம்.

" சாமியே சரணம் ஐயப்பா "


சி. சிவானந்தராஜா J.P.

**" சிவா டெக்ஸ் ரைல்ஸ் "**

172, மெயின் வீதி,
கொழும்பு - 11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**" கர்பாஷ்டமேவ விப்ராணாம் ராக்ஞாமேகாதசஸ் மிருத:**
**துவாதசேஷீச வைஸ்யானாம் வசந்தே காரயேத்தத:"**

எனவே சூத்திரக்குருமாருக்கு உபநயனமோ அல்லது எந்த ஆகமத்திலும் பூணூலை எப்பொழுதும் தரிக்கவோ விதி சொல்லப்படவில்லை.

**மேலும்,** **சுப்பிரதேதம் எனும் ஆகமத்தில் (தீட்சாவிதி படலத்தில்)**
**" பிராம்மணாதி திரிவர்ணேஸ்து உபவீதம் சதா தாரயெத்**
**சூத்திரஸ்யாபி உபவீதஞ்ச தீக்ஷயாம் காரயேத்துஷடாநந"**

அதாவது, அந்தணர், அரசர், வைஸ்யர் ஆகிய மூன்று வருணத்தவர் மட்டுமே பூணூலை எப்பொழுதும் தாிசிக்கவேண்டும். சூத்திரரோதீட்சை முதலிய காலத்தில் மட்டுமே தரிக்கலாம், எப்பொழுதும் தரிக்கலாகாது. என கூறப்பட்டுள்ளது.

மேலும், ஸ்ரீ மகுடாகம் தீட்சாவிதி ( 172 ஸ்லோகத்தில்)

**" உபவீதஞ்ச உத்தரியஞ்ச ஸ்திரீயம் என்னும் தோள்ச்சால்வையும், கிரகஸ்தராய்**
**வாழும் சூத்திரஸ்யாபி உபவீதஞ்ச தீக்ஷயாம் காரயேத்துஷடாநத"**

அதாவது, பூணூலையும், உத்திரீயம் என்னும் தோள்ச்சால்வையும், கிரகஸ்தராய் வாழும் சூத்திரக்குருமார் நீக்குதல் வேண்டும். ஆன்மார்த்தமான சிவபூஜை, த்யான காலத்தில் மட்டும் பூணூல் தரிக்கலாம். (எல்லாநேரங்களிலும் அல்ல) அப்படி கர்மகாலத்தில் சூத்திரர் தரிக்கும் பூணூலின் அளவு கூறப்படுகின்றது.

**காமிகாகமத்தில் ஸ்நானவிதிப்படலம் (89, 90 ஸலோகம்)**
**"சூத்திரமேகந்து சூத்திரனாம், வைஸ்யானாம் த்விசரம் பவேத்திறிசரம்**
**க்ஷத்திரியானாம் விப்ரானாம் சப்தசம்ஜகம்.**

அதாவது சூத்திரர் ஒருநூல் மட்டும், வைஷ்யர் இரண்டுநூல்

**அரசர் மூன்றுநூல் அந்தணர்கள் 7 நூல் தரிக்க.**
**"யத்வா பஞ்சசரம் தேஷாம், நவசூத்திரமதாபிவா"**

அல்லது அந்தணர் ஐந்து நூலும் அவர்கள் 9 நூலும் தரிக்கலாம். என்று காமிகம் கூறுகின்றது.

**மேலும்** காரணாகமம் சிவாபரீட்சாவிதியில் (34வது ஸ்லோகத்தில்) " கன்யாபிநிர்மிதம் சூத்திரம். சூத்ரானாம் தாரயேத்தத்! கா்மகாலேஷு தார்யச்ச அன்னிய காலேஷு விவர்ஜயெத்"

அதாவது கன்னிகளால் இளைக்கப்பட்ட நூலை சூத்திரக்குருமார் கர்மா செய்கின்ற காலத்தில் மட்டும் தரிக்கலாம். மற்றைய காலங்களில் பூணூல் அணிதல் கூடாது. நீக்கிவிடவேண்டும். என்று கூறப்படும்போது கானமயிலைக்கண்டு வான்கோழி ஆடுவது போல் அந்தணர்போல் சில சூத்திரகுருமார் எப்பொழுதும் பூணூல் அணிந்து திரிகிறார்கள். அது ஆகம விரோதமும் அறியாமையுமாம். இதனால் தீங்கு நேருமென்றும் கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகோரசிவாச்சாரின் கிரியாகிரமஜோதி 3ம் பாகமாகிய சைவஷோடசப் பிரகாசிகையில் 179 வது காரணாகமவிதி காட்டப்படுகின்றது.

**அவ்விதி:-** "உபவீதஞ்ச உத்தரீயஞ்ச ஸ்திரீ சூத்திரானாம் விவர்ஜயெத்வேதம ந்திரைஸ்சிகாம், சூத்திரம் சூத்திரோதாரணமாத்திரத: வைபரீத்யா கிரமாரித்தேன ராஜாராஷ்டவி நாசனம்" வாமன மூர்த்தியாக அவதரித்த பகவானுக்கு உபநயனம் செய்வித்ததை ஸ்ரீமத் பாவதம் அழகாக வர்ணிக்கிறது.

சூர்யதேவன் காயத்திரீ மந்திர உபதேசம் செய்தான். பிருஹஸ்பதி தவத்தை காக்கும் பூணூலைக் கொடுத்தார். பிரம்மச்சர்யத்திற்கு ரக்ஷை போன்ற முஞ்சிக்கயிற்றை காசிபர் இடுப்பில் கட்டினார். ஆயுளை வளர்க்கும் மான்தோலைப் பூமிதேவி போர்த்தினாள். ஒஷதிகளின் பதியான சோமன் பலாச தண்டத்தை யளித்தார். தாயான அத்தி கௌபீனத்தையும், மேலுலக தேவதைகள் குடையையும், பிரம்மா கமண்டலத்தையும், சப்தரிஷிகள் தர்பையையும், சரஸ்வதி ஜபமாலையையும், குபேரன் பிக்ஷாபாத்திரத்தையும் இவ்வாறு அளித்து சிறப்பித்தனர். உபநயனம் பெறும் ஒவ்வொரு சிறுவனும் தோற்றத்தில் வாமனர் திருவுருபோல் காட்சியளிப்பான் உபநயனம் பெற்று விட்ட பிரம்மச்சாரிக்கு வேதம் கட்டளையிடுகிறது. எப்படிஎனில் " பிரம்மச்சார்யஸி அபோ/சான/கர்மகுரு/ மாஸுஷுப்தா:" அதாவது நீ பிரம்மச்சாரியாகி விட்டாய். சந்தியாவந்தனத்தையும் மற்றைய கர்மாக்களையும் தவறாமல் செய்ய வேண்டும். உறங்காதே விழிந்தெழுந்திரு என்கிறது.

**உபநயன விதி:-**

" உபநயனம் வித்யார்த்தஸ்ய ச்ருதித: ஸம்ஸ்கார: " - ஆபஸ்தம்பர். அதாவது, வேதத்தை கற்பதற்கு வேதவிதிப்படி செய்ய வேண்டிய சம்ஸ்காரம் உபநயனம் எனப்படும்.

**" யேன கர்மணா யஸ்மின் வாகர்மணி ஆசார்யேண**
**வித்யார்த்தம் ஸுமுகூர்த்தே குமாரஸ்ய ஸ்வஸமீபே நயனம்"**

பிரயோக சிந்தாமணி.

**அதாவது -** எந்தக்கர்மாவால் ஆசார்யனால் வேதவித்தைக்கு நல்ல முகூர்த்தத்தில் மாணவன் தன்னருகே அழைத்துக் கொள்ளப்படுகிறானோ அதுவே உபநயனம் எனப்படும்.

**" மாதுரக்ரே வஜநநம், த்விதீயம் மௌஞ்ஜீ பந்தனாத்!**
**ப்ராம்மண, க்ஷத்திரிய விசஸ் தஸ்மாதேதே த்விஜா ஸ்ம்ருதா"**

**பொருள்:-** தாயிடம் முதல்பிறப்பும், உபநயனத்தால் நூல் மௌஞ்சிபந்தனம் அணிந்ததால் இரண்டாவது பிறப்பும், பிராமணருக்கும், அரசர்க்கும், வைஷ்யருக்கும் இரு பிறப்பாளர் என்ற பெயர் வந்தது சூத்திரருக்கு உபநயனம் கிடையாது.

ஆனால் சமீபகாலமாக சூத்திரரும், பூணூலை போட்டுக் கொண்டு தம்மை மற்றவர்கள் குருக்கள் என்று அழைக்கவேண்டும் என்று கருதி வேத சிவாகம விதிகளை மீறிச் செயல்படுகின்றார். பூணூல் என்பது மருந்துக்கடையில் வாங்கி யாரும் போடலாம் என்ற கேவல நிலைக்கு வந்து விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" கர்ப்பாஷ்டமேஷு விப்பிரானாம், உபநயீத
கர்பஏகாதசெஷு ராஜன்யம், கர்பத்துவாதசெஷு வைஷ்யம்
வசந்தோ கிரீஷ்மஸ் சரதித்யுதவொவர்ணாநு பூர்ய்யண "

அதாவது கர்ப்பம் தொடங்கி எட்டாவது வயதில் அந்தணர்களுக்கும், கர்ப்பம் முதல் 11 வயதில் அரசர்க்கும், கர்ப்பம் முதல் 12 வது வயதில் வைஷ்யர்க்கும் முறையே வசந்தருது, கிரீஷ்மருது, சரத்ருது இவைகள் உபநயன சம்ஸ்கார காலமாகும். இதை வீரதந்திரம் எனும் ஆகமமும் கூறுகிறது.

**பொருள்:** பூணூலையும், உத்தரீயத்தையும் கிரகஸ்தரான சூத்திரகுருமார் (கர்மாமுடிந்ததும்) நீக்கிவிடவேண்டும் வேதமந்திரம் ஓதினாலும், மொட்டையாக தலையில்லாது குடுமிவைத்திருந்தாலும், பூணூலை எப்பொழுதும் தரித்து கொண்டாலும் அந்த மாத்திரத்திலே விபரீதக்கிரமத்தால் நாட்டை ஆளும் தலைவனுக்கும் அந்த அரசின் கீழ்உள்ள மக்களுக்கும் நாசம் ஏற்படும்.

இவ்வாறு கூறப்பட்டும் இதை உணருவாருமில்லை. ஆகம அறிவில்லாது போனாலும் தமிழிலே ஆறுமுகநாவலரின் பாலபாடம் 4ம் புத்தகத்தில் வருணம் என்ற தலைப்பிலே நான்கு வருணாச்சிரம தர்மத்தையும், அவரவர் தொழிலையும் பூணூல் அணியும் காலத்தையும், மூன்று வருணத்தவருக்கு மட்டுமே உபநயனம் என்பதையும் விரிவாக எழுதியிருக்கிறார். அதைத்தானும் படிக்காது தம்மிஷ்டப்படி நடக்கிறார்கள்.

மேலும், சூத்திரக் குருமாருக்குள் மண், பெண், பொன் ஆகிய மூவாசை நீக்கிய நைஷ்டிகருக்கு பூணூல் எப்பொழுதும் தரிக்க விதி ஆகமத்திலே உண்டு சுப்பிரபேதத்தில் 'நைஷ்டிகஸ்ய சதாகுர்யாத், கிரகஸ்தஸ்ய சதாநதி"

அதாவது மூவாசை நீக்கிய நைஷ்டிகன் எப்போதும் தரிக்கலாம் கிரகஸ்த்தராய் வாழ்பவர் எப்போதும் தரிக்கக்கூடாது என விதிக்கிறது. அதனால் இல்லறத்தில் வாழும் சைவ சூத்திரக்குருமார் கர்மா செய்யும் நேரத்தில் மட்டுமே தரிக்கவேண்டும் எப்பொழுதும் தரித்தல் கூடாது. இதற்கு ஆதாரமாக தமிழில் உள்ள மறைஞானசம்பந்தர் அருளிய "சைவசமயகுறளில்" கூறப்படுவதைக்காண்க.

'தர்ப்பணத்தில் அர்ச்சனையில் ஆகுதியிலும் தரிக்க இற்பயிலும் சூத்திரரின் நூல்"
பொருள்; தர்ப்பணகாலத்திலும், ஆன்மார்த்தமான அர்ச்சனை ஆகுதிகளில் மட்டுமே இல்லறத்தில் வாழும் சூத்திரக்குருமாருக்கு பூணூல் இருக்கவேண்டியது. (எப்பொழுதுமல்ல) ஆனால் சூத்திரக்குருமாருக்குள்

"இவருணயிட்டிகன் எப்பொழுதும் தரிக்க, அவனியிலும் ஆசை அறுத்தால்" உலக ஆசைகளின்றும் விடுபட்ட நைஷ்டிகர் மட்டும் எப்பொழுதும் தரிக்கலாம் என குறள் மூலம் அறியலாம்.

மேலும், புராணம் திருமுறைகளிலே சூத்திரர் பூணூல் அணிவது என்றோ அணிந்தார்கள் என்றோ கூறப்படவே இல்லை. பூணூல் அணியும் மரபினர் அந்தணர்களே என வலியுறுத்துவதை கீழ் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெரியபுராணம்:** (தடுத்தாட்கொண்டபடலம்) பாடல் 6ல்

**"வருமுறை மரபில் வைகி வளந்து மங்கலம் செய் கோலத்து**
**அருமறை முன்நூல் சாத்தி; எனவும்**

**பெரியபுராணம்** (வெள்ளையாச்சருக்கம்) பாடல் 6ல்

அந்தணாளர் வணங்கி பெரும் முதல்வர் இருவர் ஐயாண்டு வந்த பிராயத்தினர் முந்நூல் அணியும் கல்யாணம் எனவும், 14வது பாடலில்

**மறையோன் காதலனை வெண்நூல் பூட்டி அண்ணலார்**
**முரசம் இயம்பக்கலியாணம் முடித்து" எனவும்**

**பெரியபுராணம்** (சண்டேஸ்வரநாயனார்புராணம்) 3வது பாடலில்

கோதின் மான்தோல் புரிமுந்நூல் குலவு மார்பிற் குழைக்குடுமி" எனவும்

14வது பாடலில்:- நிகழும் முறைமை ஆண்டேழு நிரம்பும் பருவம் வந்தெய்தப் புகழும் பெருமை உபநயனப் பொருளில் சடங்குமுடித்து" எனவும்.

**(குங்குலியகலயநாயனார் புராணம்)** 5வது பாடலில்

**மருவிய திருவின் மிக்க வளம்பதி அதனில் வாழ்வார்**
**அருமறை முந்நூல் மார்பினந்தணர் - எனவும்**

**(திருஞானசம்பந்தர் புராணத்தில்)** 87வது பாடல்

**"அப்பொழுது அங்கண் அணைந்தது. கண்டவர் அல்லாதார்**
**முப்புரிநூல் மறையோர்களும்" எனவும்**

263வது பாடலில்,

**"ஒல்லைமுறை உபநயன பருவமெய்த**
**உலகிறந்த சிவஞான முனரப் பெற்றார்**
**தொல்லைமுறை விதிச்சடங்கு மறையோர் செய்ய" எனவும்**

**"ஒருபிறப்பு மெய்தா மைடையார் தம்மை**
**உலகியல்பில் உபநயன முறைமையாகும்**
**இருபிறப்பினிலைமையினைச் சடங்குகாட்டி" எனவும்**

274வது பாடலில்: **"பொன்மார்பின் முன்நூல் புனைந்த புகலிப்பிரான்"** எனவும்

337வது பாடலில்:- **முப்புரிநூலுடன் தோலணிமார்பர்** - எனவும் பல இடங்களில் அந்தணர்க்கே பூணூல் சடங்கு (உபநயனம்) நடைபெற்றதைக் காணலாம்.

எனவே வேதம் ஓதுதலும் பூணூல் நித்யம் தரிப்பதும் ஆகமவிதிப்படி அந்தணர்கே சொல்லப்பட்டிருக்கிறது. எனவே விதி அறிந்து நடக்க வேண்டும்.

பகவத்கீதை (ஞானகர்ம, சன்னியாசயோகம்) பாடல் 13ல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**" யஃ சாஸ்திர விதிம் உத்ஸ்ருஜ்ய, வர்த்ததேகாம காரதஃ**
**நஸஸித்திம் அவாப்நோதி நசுகம் நபாராம் கதிம்**

அதாவது எவன் சாஸ்திரவிதிகளை உதாசீனம் செய்து விட்டு மோகத்தில் வசப்பட்டு தன்னிஷ்டிப்படி நடக்கிறோனோ அவனுக்கு எதிலும் சித்தி கிடைக்காது. யாவராலும் இகழ்ப்பட்டு சுகம் இழப்பான். மேலான மோட்சமும் அடையமாட்டான்.

ஆகையால், **" ஞாத்வாசாஸ்திர விதானேத்தம் கர்மகர்த்தும் இஹார்ஹஸி"**

சாஸ்திர விதிகளை அறிந்து கர்மங்களை செய்யுங்கள்.

மேலும்,

**" ஸ்சுவாயம்புவம் " என்னும் ஆகமத்தில், இறைவாக்கியமாக :–**
**" ஸ்சுருதியாகமென மமைவாகஞா" யஸ்தா முல்லக்யவர்ததெ**
**ஆக்ஞாபேதி, மமத்துரோகி, நசைவஃ பக்திமாநகி " கதாயுர் நரகே**
**கோரேவசத் கல்பசதத்திரயம் " – கூறப்படுகின்றது.**

**பொருள்:–** வேதமும், ஆகமமும் எனது கட்டளை. எவன் இவைகளை உதாசீனம் செய்கிறானோ, அவன் எனது கட்டளையை மீறியவன், எனக்கு துரோகி. இவன் சைவனுமல்ல. பக்திமானுமல்ல, மகாபாபி. கோரமான நரகத்தில் 300 கல்பகாலம் துன்புறுவான். என விளக்கப்படுகின்றது.

எனவே – வேத ஆகம விதிகளை மீதி நடப்பவர்களைச் சைவ உலகம் தெரிந்து கண்டிக்க வேண்டும். விதி தெரியாதோர் இவைகளை அறிந்து இனியாகிலும் விதியறிந்து நடப்பார்களாக.

**" வேத நெறி தழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்க"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# தாண்டவம் புரியும் எமதாண்டவன்

**சிவஸ்ரீ டாக்டர் சாம்பசிவ சண்முகநாத சிவாச்சாரியார் (லண்டன்)**

முக்தி க்ஷேத்திரங்களில் மிகப் பிரசித்தமான க்ஷேத்திரம் சிதம்பரம். இதுவே தில்லைவனம். இதற்கு அதிதேவதை காளி. ஒரு சமயம் அவ்வனத்திற்கு வந்த ஈஸ்வரனை தன்னுடன் நாட்டியத்திற் போட்டியிடும் படியும் போட்டியில் வெற்றிபெற்றால் தான் தில்லைவனத்தினுள் பிரவேசித்து நடனம் புரியலாம் எனவும் கூற ஈஸ்வரன் அதற்கு இயைந்து நடனமாடி ஸ்திரிகளால் அபிநயிக்க முடியாத ஊர்த்வ தாண்டவம் ஆடி காளியை வென்று சிற்சபையில் முதன் முதலில் ஆனந்த தாண்டவம் புரிந்தார். அன்றுமுதல் நடராஜர் சபாநாயகராகவும் பிரதான உபாஸ்ய மூர்த்தியாகவும் திகழ்கின்றார். காளிதேவியானவள் தில்லைவனத்தின் எல்லைக்கப்பால் வடக்கு நோக்கிச் சென்று எல்லைகாக்கும் தெய்வமானாள்.

சிதம்பரம் ஐந்து நடன சபாக்களை உடையது. கனகசபை-சிதம்பரம், ரனசபை-திருவாலங்காடு, ரஜதசபை-மதுரை, தாம்பரசபை-திருநெல்வேலி, சித்ரசபை-திருக்குற்றாலம் எனப்படும். இவை யாவற்றிலும் பிரதான லிங்கமாகவும் மூல நாயகராகவும் ஸ்ரீ நடராஜர் விளங்குகின்றார். அனவரதமும் பக்தர்களை அனுக்கிரகிப்பதற்காக தைமாத குருபுஷ்ய நட்சத்திர சுப தினத்திலே மாத்யான்னிய நேரத்தில் ஸதா தாண்டவம்-நாதாந்த தாண்டவம், பஞ்ச கிருத்திய பரமானந்த தாண்டவம் எனப் புகழப்படும். ஆனந்த தாண்டவத்தால் பக்தர்களை அனுக்கிரகிக்கின்றார். ஆனந்த தாண்டவம் ஈசனின் தாண்டவங்களுள் அடிப்படையானதாகும். தாருகா வனத்தில் முனிவர்களின் அகந்தையை அடக்கி ஞானிகளாக்கி அனுக்கிரகித்த போது அவர்கள் முன்பாக ஆனந்த தாண்டவம் புரிந்தருளினார்.

தாண்டவ ரூபத்தில் ஈஸ்வரன் நான்கு கரங்களுடன் விளங்குகிறார். வலது மேற்கையில் உடுக்கையும் கீழ்வலது கையில் வரத முத்திரையுடனும் மேல் இடது பாதமான குஞ்சித சரணத்தைக் காண்பித்துக் கொண்டும் விளங்குகிறார். வலதுகாலை முயலகன் மீது வைத்து ஊன்றிக் கொண்டும் இடது பாதம் சற்று வளைந்து ஆடுவதாகவும் விளங்குகிறார்.இவ்வானந்த தாண்டவம் பஞ்ச கிருத்தியத்தை விளங்கிக் கூறுவதாம்.

ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், திரோபவம், அனுக்கிரகம் (படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்) தாண்டவம் விளக்குகிறது. தனது ஆனந்த தாண்டவத்தால் தனது சொருபங்களான பிரமா விஷ்ணு, ருத்திரன், மஹேஸ்வரன், சதாசிவன் ஆகிய பஞ்ச கர்த்தாக்களின் தொழில்களைத் தாமே ஒரே சமயத்தில் நடித்துக் காண்பிக்கின்றார். இதன் உண்மையை ஸ்ரீ நடராஜர் தியான மந்திரத்திலிருந்து அறியலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கோகா நாஹுய சர்வாந் டமருக நிநதைர்கோர சம்ஹார மக்நான்
தத்வா அபீதிம் தயாலு:
பிரண தபயஹரம் குஞ்சிதம் வாமபாதம் உத்திருத் யேதம்
விமுக்தரய நமிதி கராதிருர் சயந் பிரத்தி யார்த்தம்
விப்ரத்வக்னிம் சபாயாம் கலயதி நடநம் யச்சபா யான் நடேச:"

டமருகம் (உடுக்கை) தாங்கும் கையால் படைத்தலையும் அபய கஸ்தத்தால் காத்தலையும், அக்னி தாங்கு கையால் அழித்தலையும், தூக்கிய திருவடியால் (குஞ்சிதசரணம்) அருளலையும், முயலகன் மீது வைத்திருக்கும் திருவடியால் மறைத்தலையும் உணர்த்துகின்றார்.

" தோற்றந் துடியதனிற் றேயுந் நிதியமைப்பிற் சாற்றியிடு மங்கியிலே சங்காரம்– ஊற்றமாவுன்றி மலர்ப்பதத்தி கூற்ற திரோதமுத்தி நான்ற மலர்ப்பதத்தே நாடு"

" அரன்துடி தோற்றம் அமைத்தல் திதியாம் அரன் அங்கி தன்னில் அறையிற் சங்காரம் அரனுற் றணைப்பில் அமரும் திரோதாயி அரனடி யென்றும் அனுக்கிரகம் என்னே"

" எனத் திருமூலர் திருமந்திரம் (2799) கூறுகின்றது.

இன்னும் நடராஜரின் ஆனந்த தாண்டவத்தைப் பல கோணங்களில் நின்று ஒரே கருத்தமைந்ததாக ஞானிகள் கண்டுகளித்த பல தத்துவக் கருத்துக்களை ஈண்டு நோக்கும் போது ஸ்ரீ நடராஜரின் உடுக்கை "ஒலி" உலகின் சப்த சொரூபத்தை விளக்குகின்றது. அக்னி தாங்கிய கரம் பக்தர்களுக்கு அருள் பாலித்தலையும், தூக்கிய திருவடி அத்வைத நித்தியானந்த பிராப்தியையும் அளிக்கின்றது. மேலும் மகுடாகமம், உண்மை விளக்கம், திருமந்திரம், ஸ்ரீ நடராஜரின் தாண்டவத்தை பிரணவத்துடன் பஞ்சாக்ஷரங்களுடன் அமைத்து உணர்த்துகின்றது. மகுடாகமம்

**மகுடாகமம்**

**நகாரம்–சிருஷ்டிரூபம் ஸயாத்**
**மகாரம்–ஸ்திதி ரூபகம்**
**சிகாரம்–ஸம்ஹிருதிம் கிருத்வா**
**வாகாரம்–து திரொபவம்**
**யகாரம்–முக்தி தம் சைவ**
**பஞ்சகிருத்யம் பஞ்சாட்சரம்:**

**(உண்மைவிளம்பி)**

ஸ்ரீ நடராஜர் ஓம் என்ற பிரணவாகாரத்தில் அமைந்திருக்கிறார். அக்னி ஹஸ்தம் நகாரத்தையும் இரு திருவடிகள் மகாரத்தையும் வளைந்த இடதுகரம் சிகாரத்தையும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுக்கை தாங்கும் கரத்தால் வகாரத்தையும், அபயகரம் யகாரத்தையும் அறிவிக்கின்றன.

**சேர்க்கும் துடிசிகரம் சிக்கனவா வீசுகரம்**
**ஆர்க்கும் யகரம் அபயகரம்–பார்க்கிலின்றக்**
**கங்கி நகரம் அடிக்கீழ் முயலகனார்**
**தங்கு மகரமது தான்**

**(உண்மைவிளம்பி 337)**

இன்னும் ஆனந்த தாண்டவத்தில் பிர்மா, விஷ்ணு, ருத்திரன் மகேஸ்வரன் சதாசிவன், பிந்து, நாதம், பராசக்தி பரமசிவம் என்கிற ஒன்பது தத்வங்களும் ஒருங்கே அமைந்து விளங்குவதாக ஹாலாஸ்ய மாஹாத்மியத்தில் கூறப்படுகின்றது.

நாரத முனிவர் தபஸ் செய்து நடராஜர் உடுக்கை ஒலியில் இருந்து சங்கீத ஸ்வரங்களான " சரிகமபதநிச" என்பதை அறிந்து சங்கீத சாஸ்திரத்தை அபிவிருத்தி செய்தார். ஸ்ரீ ஆதிசங்கர பகவத், பாதாள் சௌந்தர்ய லகரியில் தாண்டவத்தை நவரசங்கள் பொருந்தியதாக வர்ணிக்கிறார்.

இப்படியாக எல்லாம் வல்ல ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத நடராஜ பெருமான் நமது அல்லல் களைந்து ஆனந்த வாழ்வளிக்கிறார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எண்குணத்தான்....

முத்தமிழ்குருமணி சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக்குருக்கள், சுன்னாகம்

" கோளில் பொறியிற் குணமிலவே யெண் குணத்தான்
தாளை வணங்காத்தலை" – வள்ளுவர்

பரமபதியாகிய இறைவனுக்கு சிறப்புரிமையாக எண்குணம் கூறப்படுகிறது. அவை யாவன: இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்வாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடமை, வரம்பிலின்பமுடைமை என்பனவாம் சைவாகமத்திலும் இவை பேசப்படுகிறது. திருமுறைகளிலும் " எட்டுவான் குணத்தீசனெம்மானறனை" எனவும் " எட்டுக் கொலாமவரீறல் பெருங்குணம்" எனவும் கூறப்படுகிறது. இதை காஞ்சிபுராணப்பாடலில்

முடிவிலாற்றலை தன்வயத்தினை முற்றுணர்ச்சியை
மடிவிலாட்சியை தூயமேனியை மற்றியற்கையுணர்ச்சியை
படியிலாவியல்பாக நீங்கிய பாசநோயை வரம்பிலின்
புடைமை யுன்னடியேங்களென்று முனக்கடைக் கலமையனே"

என வகுத்து கூறப்படுகிறது.

1. **தன்வயத்தனாதல் :–**

தான் ஒரு பொருளிலும் வயப்படாமல் எல்லாம் தன்வயமாக இருத்தல். உலகம் அவனுருவில் தோன்றி ஒடுங்கிடுமாதலால் " விஸ்வ காரணம்" என சுருதி கூறுகிறது.

அவனின்றி ஓர் அணுவும் அசையாது சர்வதத்வாதிபதியும் அவனேயாதலால் தவன்யத்தனாதல்.

2. **தூயவுடம்பினனாதல்:–**

இறைவன் அருளேருமேனியாகி ஏனைய ஒளிகளெல்லாம் தமது திருமேனி ஒளியால் விளங்க விரும்புவனாதலால் தூயவுடம்பினனாதல் மேலும்; மாயவிகாரமெய்தி கர்பத்தில் சென்று துன்பப்படாதவன் பசி, நோய், மதம் ஆச்சரியம் முதலிய உயிர்களுக்குரிய குணமில்லாதவன் நிர்மலதேகி எனவேதம் உரைப்பதாலும் தூயவுடம்பினனாதல் ஆகின்றான்.

3. **இயற்கை உணர்வினனாதல்:–**

கருவிகள் ஒன்று இல்லாமல் அறிவிப்பாரின்றி எக்காலத்தும் திரிவின்றி யாவும் ஒருங்கே அறிந்தாங்கு அறிந்து நிற்கும் சித்துப்பொருளாதலால் இயற்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வினனாதல் இறைவன் ஆகிறான்.

4. **முற்றுமுணர்தல்–**

பண்ணும் ஓசையும் போலவும் விறகில் தீ போலவும், பாலில் கலந்துள்ள நெய்போலவும் பிரிவின்றி உலகம்யாவிலும் வியாபகமாய் (சர்வவியாபி) எல்லாம் முழுமையாக அறியும் குணத்தவன் ஆகிறான்.

5. **இயல்பாகவே பாசங்களினீங்குதல்:–**

குருமேனி தரித்து கல்லால மர நிழலிலே இருந்து நந்திமுதலான முனிகணத்தவர்க்கு ஞான உபதேசம் செய்து பாசங்களை நீக்கி முத்தியின்பம் அருளிய ஆற்றலாலே இயல்பாகவே பாசங்களினீங்குதல் பாசங்களுள் கட்டுப்படாமலும் ஆன்மாக்கள் தன்னடி நிழலில் சரணடையும் போது பாசங்களை நீக்கி முத்தியின்பம் கொடுக்கிறான்.

6. **பேரருளுடைமை:–**

இயற்கையாகவே பரமகருணாநிதியாக விளங்கும் இறைவன் உயிர்களுக்கு இன்பதுன்ப நுகர்ச்சிக் கூறுபாட்டால் அதற்கு காரணமாகிய இருவினைகளை நீங்கி அருள்வதால் விருப்பு வெறுப்பு இல்லாமல் யாவர்க்கும் இன்பம் அருள்பவனாதலால் பேரருளுடைமை ஆகிறான். மற்றவர்க்காக தாம் நஞ்சை உண்டவன்

7. **முடிவிலாற்றலுடைமை:–**

வேத ஆகமங்களின் நெறியில் நடப்பவர்க்கும் நடக்காதவர்க்கும் அவரவர் முறைக்கு ஏற்றவாறு சுகதுக்கங்களை அளித்து நிற்பதால் முடிவிலாற்றலுடைமை ஆகிறான். மேலும் சர்வசங்காரகாலத்தில் எல்லாப்பொருள்களிலும் வியாப்பியமாய் இருப்பவன்.

8. **வரம்பிலின்பமுடைமை:–**

சார்ந்ததன் வண்ணமாய் நிற்கும் ஆன்மாக்களை எல்லாம் புண்ணிய மேலீட்டால் பக்குவமெய்தி சத்தி பதியப் பெற்று வினையொப்புவாய்ந்து சற்குரு உபதேசம் பெற்று துவித பாவனையைக் கைவிட்டு சிற்றறிவு நீங்கி ஞானக்கண்ணினால் சிவனை ஆன்மாவில் கண்டு சிவனொடு ஐக்கியப்பட்டு நிற்கையில், தன் ஆனந்தமாகி முடிவிலாப் பேரின்பத்தை அவ்வான்மாக்களுக்கு நுகர்விப்பதால் வரம்பிலின்பமுடைமை ஆகிறான். எல்லா உயிருக்கும் இன்பம் செய்தலால் சங்கரன் சம்பு என போற்றப்படுகிறான்.

**சுபமஸ்து.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (வினா - விடை)

1. **வினா** இந்துக்களின் இறைவழிபாட்டில் முதல் இடம் பெறும் தெய்வம் யார்?

**விடை** விநாயகப் பெருமான். ( பிள்ளையார் பூசை செய்யாமல் எந்தக் காரியத்தையும் தொடங்க மாட்டார்கள்.)

2. **வினா** விநாயகன் என்பதன் பொருள் என்ன?

**விடை** வி+நாயகன் = விநாயகன் தனக்கு மேலே ஒரு தலைவன் இல்லாதவன்.

3. **வினா** விநாயகப் பெருமானுக்குரிய விரதங்கள் எவை?

**விடை** சதுர்த்தி விரதம், விநாயக ஷஷ்டி விரதம், வைகாசிமாத வெள்ளி விரதம், தைமாத விரதம், ஆடிமாத செவ்வாய்க்கிழமை விரதம், சங்கட ஹர சதுர்த்தி ( மாசிமாத தேய்பிறை சதுர்த்தி )

4. **வினா** விநாயகப் பெருமானுக்குரிய நெய்வேத்தியங்கள் எவை?

**விடை** லட்டுகம் ( மோதகம் ), அவல், பயறு, கடலை, கரும்பு, மாம்பழம், பலாப்பழம், கற்கண்டு, சக்கரை, எள்ளுருண்டை, இளநீர், பால், தேன். " கரும்பும் இளநீரும் காரெள்ளும் தேனும் விரும்பும் அவல் பலவும் " ( பிள்ளையார் கதை காப்பு ) பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை நான்கும் கலந்து ( தமிழ் மூதாட்டி ஔவை )

5. **வினா** விநாயகப் பெருமானை எவ்வாறு வணங்க வேண்டும்?

**விடை** தலையில்குட்டி, தோப்புக்கரணம் போட்டு வணங்க வேண்டும்.

6. **வினா** விநாயகப் பெருமான் முன்னிலையில் எத்தனை முறை தலையில் குட்டி வணங்க வேண்டும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடை — விநாயகப் பெருமான் முன்னிலையில் ஐந்து தரம் தலையில் குட்ட வேண்டும்.

7. வினா — விநாயகப் பெருமானை மூன்று முறை குட்டி வணங்குகிறார்களே இதன் விளக்கம் என்ன? ஐந்து முறை குட்ட வேண்டும் என்பதன் விளக்கம் என்ன?

விடை — மூன்று முறை குட்டுவது இராக்ஷதகுட்டு ஐந்துமுறை தலையில்குட்டி வணங்குவது தேவகுட்டு.

8. வினா — இராக்ஷதகுட்டு, தேவகுட்டு என்பவற்றின் பொருள் என்ன?

விடை — அசுரனுக்கு ( ராக்ஷசன் ) முன் மூன்றுமுறை தலையில் குட்டி வணங்கினார்கள் தேவர்கள் இது ராக்ஷசனுக்காக குட்டியது எனவே அது ராக்ஷச குட்டு.

தெய்வத்தின் முன்னிலையில் தலையில் ஐந்துமுறை குட்டி வணங்கினார்கள் தேவர்கள் எனவே இது தெய்வத்திற்காக குட்டப்பட்டது தேவகுட்டு.

9. வினா — இராக்ஷத குட்டு, தேவகுட்டு இவற்றின் விளக்கத்தை சற்று விரிவாகக் கூறுங்களேன்?

விடை — கஜமுகாசுரன் தேவர்களைத் துன்புறுத்தும் காலத்தில் அனைத்து தேவர்களும் தினமும் தனக்குமுன்னிலையில் வந்து மூன்றுமுறை கைகளை மாறிப்பிடித்து தலையில் குட்ட வேண்டும் என்று கட்டளை இட்டிருந்தான்.

எனவே அசுரன் மீதுள்ள பயம் காரணமாக தேவர்கள் தினமும் கஜமுகாசுரனை வலம்வந்து கைகளை மாறிப்பிடித்து தலையில் மூன்றுமுறை குட்டி வணங்கினார்கள்.

விநாயகப் பெருமானின் கருணையினால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசுரனிடமிருந்து தேவர்களுக்கு விமோசனம் கிடைத்தது. தம்மைக்காப்பாற்றிய விநாயகப் பெருமான் முன்னிலையில் கைகளை நேராகப் பிடித்து தலையில் ஐந்துமுறை குட்டி தேவர்கள் வணங்கினார்கள்.

எனவே கைகளை மாறிப்பிடித்து மூன்று முறை குட்டுவது அசுரனுக்குச் செய்யும் வணக்கமாகும். கைகளை நேராகப்பிடித்து ஐந்துமுறை தலையில் குட்டி வணங்குவதே விநாயகப் பெருமானுக்குச் செய்யும் வணக்கமாகும்.

**10. வினா** விநாயகப் பெருமான் முன்னிலையில் ஐந்து முறை குட்ட வேண்டும் என்பதற்கு ஏதேனும் ஆதாரம் உண்டா?

**விடை** ஆம்! ஆதாரம் உண்டு.
விநாயக மனுஸ்மிருத்ய குட்டனம் பஞ்சவாரகம்! சுக்லாம் பரதரமிதி பஞ்சதா பாலன குட்டனம் க்ருத்வா!! ( காரணாகமம் )
விநாயகப் பெருமானுக்கு முன்னிலையில் ஐந்துமுறை குட்ட வேண்டும் என்று காரணாகமம் கூறுகிறது.

**11. வினா** விநாயகப் பெருமான் முன்னிலையில் முதல் முதலாக ஐந்து முறைகுட்டி வணங்கியவர் யார்?

**விடை** கஜமுகாசுரனுடைய துன்பத்திலிருந்து விநாயகப் பெருமானால் விடுவிக்கப்பட்ட தேவர்கள் முதன் முதலில் ஐந்து முறை தலையில் குட்டி வணங்கினார்கள்.

**2. வினா** விநாயகப் பெருமான் வழிபாட்டில் தேங்காய் உடைப்பதன் காரணம் என்ன?

**விடை** திரிபுர தகனம் செய்வதற்கு புறப்பட்ட சிவபெருமான் விநாயகரை நினைக்காமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரதத்தில் ஏறிச் சென்றார் யார் எந்த காரியத்தை தொடங்கினாலும் விநாயகப் பெருமானை வணங்கியே தொடங்க வேண்டும் என்று கட்டளையிட்ட சிவனே விநாயகரை நினைக்காமல் சம்காரத்திற்கு புறப்பட்டார்.

எனவே விநாயகப் பெருமான் அந்த ரதத்தின் அச்சினை உடைத்து ரதத்தை ஓடாமல் செய்தார். இதனை திருப்புகழ் பாடிய அருணகிரி நாதர் " கைத்தல நிறைகனி " என்று தொடங்கும் திருப்புகழில்,

" முப்புரம் எரிசெய்த அச்சிவன் உறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா "

என்று பாடியுள்ளார்.

ரதம் ஓடாமல் நின்றமைக்கு விநாயகனே காரணம் என நினைத்த சிவன் நாரதரை விநாயகரிடத்தில் அனுப்பி தந்தை போருக்கு புறப்படுகிறார் உன் குறும்பு தனத்திற்கு இது நேரமல்ல ரதத்தை மீண்டும் ஓடச்செய் என வேண்ட விநாயகரோ தப்பு செய்தவர் யாராக இருந்தாலும் தண்டனை பெறவேண்டும் எனவே தந்தையின் தலையைக் கொண்டு வந்து என் முன்னே சிதற உடைக்குமாறு கூறினார். நாரதர் சிவனிடத்தில் சென்று இதனைக் கூற சிவன் மூன்று கண்களோடு, சடாமுடியோடு தேங்காயை உற்பவித்து கணபதி முன்னே உடை என நாரதரிடத்தில் கொடுத்தனுப்பினார்.

நாரதரும் விநாயகரிடத்தில் சென்று சிவனால் கொடுக்கப்பட்ட தேங்காயை விநாயகரிடத்தில் கொடுத்து உனது தந்தையின் தலையை கொண்டு வந்திருக்கிறேன் என கூற விநாயகர் என் முன்னே சிதற உடை என்று கூறினார். (எனவே நாரதர் தேங்காயை விநாயர் என் முன்னே சிதற உடை என்று கூறினார்.) எனவே நாரதர் தேங்காயை விநாயகர் முன்னே சிதற உடைத்தார். உடனே சிவபெருமானின் ரதம் மீண்டும் ஓட ஆரம்பித்தது. எனவே அன்றுமுதல் விநாயகர் முன்னிலையில் சிதற தேங்காய் உடைக்கும் வழக்கம் தொன்று தொட்டு வந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெருமை வாய்ந்த ஐயப்பன்

(குருசாமி ஸ்ரீ ஐயப்ப தாஸன் அவர்கள்)

ப்பன் ஐயப்பன் பெருமைவாய்ந்த ஐயப்பன்
ஐயப்பன் ஐயப்பன் பெருமைவாய்ந்த ஐயப்பன்
சபரிமலைக்காட்டினிலே பொன்னம்பல மேட்டினிலே
கோவில் கொண்ட ஐயப்பன் குறைகள் தீர்க்கும் ஐயப்பன்
(ஐயப்பன் ஐயப்பன்)

ஆறுமுகவேலவனின் தம்பியான ஐயப்பன்
நேரும் துன்பம் யாவையுமே தீர்த்துவைக்கும் ஐயப்பன்
(ஐயப்பன் ஐயப்பன்)

பம்பாநதி தீரத்திலே திரு வேணி சங்கமத்தில்
தீர்த்தமாடும் பக்தர்களின் கவலைதனை தீர்த்திடுவான்
(ஐயப்பன் ஐயப்பன்)

ஐயப்பன் என்றிடினும் ஐயனார் என்றிடினும்
அன்பர்களின் உள்ளத்திலே கோவில் கொண்டமணிமண்டன்
(ஐயப்பன் ஐயப்பன்)

சபரிக்கு அருள்செய்த சங்கரனின் புதல்வனவன்
பக்தருடன் சாஸ்தாபீட தொண்டரையும் காத்திடுவான்
ஐயப்பன் ஐயப்பன் பெருமைவாய்ந்த ஐயப்பன்
ஐயப்பன் ஐயப்பன் பெருமைவாய்ந்த ஐயப்பன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



## திரிசூலி

அஞ்சாத செஞ்சடச்சி மாகாளி - அம்மா
ஆதிசிவன் பத்தினியே திரிசூலி (அஞ்சாத)

கொஞ்சும் சதங்கை ஒலி கேட்குதம்மா - உன்
கெண்டை கூத்துக்கண்டு குளிருதம்மா (அஞ்சாத)

செஞ்சடையை அலங்கரிக்கும் நாகமம்மா - உன்
தேகமெல்லாம் விளையாடும் நாகமம்மா (அஞ்சாத)

பாலாபிஷேகம் செய்து மாகாளி - உந்தன்
பாதம் தனை தொழுதிடுவோம் திரிசூலி (அஞ்சாத)

தேனாபிஷேகம் செய்து மாகாளி - உன்
சேவடியை வணங்கிடுவோம் திரிசூலி (அஞ்சாத)

செவ்வரலி மாலை போட்டு மாகாளி - உனக்கு
செய்திடுவோம் பூஜைகளும் திரிசூலி (அஞ்சாத)

மல்லிகைப்பூ சரம் தொடுத்து மாகாளி - உந்தன்
மலரடியை தொழுதிடுவோம் திரிசூலி (அஞ்சாத)

சமயபுர மாரியம்மா மாகாளி - எங்கள்
சஞ்சலங்கள் தீர்த்திடுவாய் திரிசூலி (அஞ்சாத)

வேற்காட்டு கருமாரிமாகாளி - அம்மா
வேண்டும் வரம் தந்திடுவாய் திரிசூலி (அஞ்சாத)

தஞ்சமென்று வருவோர்க்கு மாகாளி - உந்தன்
தரிசனத்தை தந்திடுவாய் திரிசூலி (அஞ்சாத)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிந்துகின்ற கண்ணீர் திவலைகள்!!!

## "கலாநிதி அருள்ஜோதி ஸ்தந்த சாம்பசிவ சிவாச்சார்யார்"



மனம் வாடி உளம் நொந்து உருகி மனம் வேகுதையா
இறைமடியில் துயில்கின்ற மறைஞானி எம் ஐயா
மணம் வீசி புகழ்பரப்பி மறை ஓதி மகிழ்ந்த நீங்கள்
இன்று அறிதுயில் கொண்டு எமை ஆறாத் துயர் ஆக்கிவிட்டு
நிம்மதியாய் தூங்க மனம் எப்படி வந்ததையா.

மலை போல உமை நம்பி மகிழ்ந்த உங்கள் துணையின்றி
சிலை போல தவிக்க விட்டு சென்று விட்டீர் பிள்ளைகளை,
தலை முறையாய் வாழ்ந்து வந்த பேரப், பூட்டப் பிள்ளைகளை
நிழலின்றி நிர்க்கதியாய் தவிக்க விட்டு எங்கே சென்றுவிட்டீர்

பால் போன்ற வெள்ளை மனத்தினனாய் பக்குவமாய்
பல கதை சொல்லி ஆசீர் வதித்து எமை அன்புடன்
ஆரத் தழுவி நிலையாக வாழ வழி சொன்னீர்கள்
நாம் நினைவை திருப்ப முன்னே எங்கே ஐயா மாயமாய்
மறைந்து விட்டீர்.

துயருறும்
சபரிமலை மாலை அணிந்த சுவாமிமார்களும்,
சாஸ்தா பீட பக்தர்களும்,
மாதரணியினரும்.

## அகில இலங்கை சபரிமலை ஸ்ரீசாஸ்தா பீடம்

90/22, ஜோசப் டயஸ் லேன் – கொழும்பு – 15. 527025

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மாதம் ஒரு ஹோமம்

(விஷட யாகம்)

மாதம் ஒரு ஹோம் என்னும் விஷேட யாகத்தில் தங்கள் பெயர்களும் சேர்த்துக் கொள்ளவிரும்பினால் தங்கள் பெயர், குடும்பத்தினர் பெயர், நசஷத்திரம், வேண்டுதல்களை எழுதி கீழ்கானும் முகவரிக்கு அனுப்பி வைத்தால் விஷேடயாகத்தில் தங்கள் பெயர்களும் சேர்த்துக்கொள்ளப்பட்டு விபூதிப் பிரசாதம் அனுப்பிவைக்கப்படும்.

இதற்கென கட்டணம் ஏதும் அறவிடப்படமாட்டாது. பக்தர்கள் மன முவந்து அனுப்பும் காணிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

**SABARIMALAI SRI SASTHAPEEDAM**
**90/22, Joseph Dias Lane, Blumendhal Road, Colombo 15.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவாச்சாரியாரின் .......

# ❖ அருள் ஜோதி ❖

எனும் ஆன்மீக மாத இதழ் நறுமணம் கொண்டு
மலர எல்லாம் வல்ல ஸ்ரீ அம்பிகையை
வேண்டி அன்னை அருள்
அனைவருக்கும் ஜோதியாக
திகழ பிரார்த்திக்கிறோம்.

சுப. சோலைமலைத் தேவர் J.P.
– அதிபர் –
" அம்பிகா ஜுவல்லர்ஸ் "
77, செட்டியார் தெரு,
கொழும்பு – 11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## கொழும்பு - இந்துமத குருபீடம்

வெளியிடுகின்ற

" அருள்ஜோதி "

எனும் ஆன்மீகசஞ்சிகை

சகலருக்கும் பயனுடையதாக மலர

ஜெயம் கொடுக்கும் நித்யகல்யாணியாகிய

அன்னை ராஜராஜேஸ்வரி அம்பாளின்

பாதாரவிந்தங்களைப் போற்றுகிறோம்.

S. மயில்வாகனம் J. P.

" ஜெயநித்ய கல்யாணி நகை மாளிகை "

69, செட்டியார் தெரு,

கொழும்பு - 11.

தொலைபேசி - 426923

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org